[illegible]

വാ. 16 ലക്കം 3, 4

[illegible] 1932

[illegible] N 02 GS
N32 16.3,4
[illegible] 10465

ஓம்

# ஞானசாகரம்
## (அறிவுக்கடல்)
# JNANASAGARAM

இது
முப்பது ஆண்டுகளாக நடைபெறுந்
தனிச் செந்தமிழ் வெளியீடு
A BI-MONTHLY

பதுமம், ௧௰.] ஆங்கிரச ஞு ஆனி, ஆடி [இதழ், ௩, ௪.

## பொருளடக்கம்

சிறுவர்க்கான செந்தமிழ்
(Essays for the Young)
மக்கள் நூறாண்டு உயிர்வாழ்தல் எப்படி?
(How to live hundred years?)

7-OCT 1932

ஆசிரியர்:
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,
SWAMI VEDACHALAM,
பொதுநிலைக்கழக குரு,
பல்லாவரம்
PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள
டி. எம். அச்சுக்கூடத்திற்
T. M. PRESS
பதிப்பிடப்பட்டது;

28th, Sep 1932.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

ஓம்

## ஞானசாகரக் கையொப்ப நேயர்க்கு

அன்பர்காள்,

ஞானசாகர கஉ-ஆம் பதுமத்து முதலிரண்டு இதழ்களையும் அதன் கையொப்பத் தொகை நாலேகால் ரூபாவுக்காக வி. பி. பியிற் பெற்றுக் கொண்டு, நீங்கள் உதவி செய்தமைக்காக நுங்கட்கு எமது நன்றியைச் செலுத்துகின்றேம். நமது ஞானசாகரமானது நாகரிய தனித் தமிழ் வளர்ச்சிக்கும் நமதரிய தமிழ்க் கொள்கைவளர்ச்சிக்குந் தொடர்பாகத் தொண்டுசெய்துவரும் அருமை பெருமையினைப் பாராட்டி, அதனை நீங்கள் வாங்கிக்கற்றும், நுங்கள் நண்பர்களும் அதனை வாங்கிக் கற்கும்படி செய்தும் உதவிபுரிந்து வருதலின் நுங்கட்கு எல்லாம்வல்ல ஆண்டவன் அருளால் எல்லாநலங்களும் மேன்மேற் பெருகுக!

ஆனி, ஆடித் திங்கட்குரிய இவ்விரண்டு இதழ்களும் ஆவணித் துவக்கத்திலேயே வெளிவரல் வேண்டுமாயினும், எமது அச்சுக்கூட வேலையாட்கள் அடிக்கடி வேலைக்குவராமல் நின்றுவிடுதலாலும், புதிய ஆட்களை வருவித்து அவர்களை அச்சுவேலையிற் செவ்வையாய்ப் பழக்கி அதனை நடத்துவதில் வீண்காலக்கழிவும் அளவிறந்த தொல்லையும் ஏற்படுதலாலும் இவை காலந்தாழ்த்து வெளிவரலாயின. எமது அச்சுக்கூடஞ் சென்னையில் இருக்குமாயின், எம்முடைய அச்சுவேலைகள் காலந் தாழாமல் ஒழுங்காக நடக்கும். அச்சு வேலைக்காரர்கள் இல்லாத இப் பல்லாவரத்தில் இதனைவைத்து நடத்தவேண்டி நேர்ந்தமையால், எம்முடைய அச்சுவேலைகள் எவ்வளவோ முயன்றும் காலந்தாழ்த்தே நடைபெறுகின்றன. ஆதலால், நமது ஞானசாகர இதழ்கள் காலந்தாழ்த்து வெளிவருதலைப் பாராட்டாதிருக்கும்படி நுங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

ஞானசாகர ஆசிரியர்.

## மறைமலையடிகளின் அச்சுக்கூடமும் நூல்களும் மொத்தவிற்பனை

ஆசிரியர் மறைமலையடிகள் தாம் அரும்பாடுபட்டு உயர்ந்த நூல்கள் ஆராய்வதும், தாம் ஆராய்ந்தறிந்த அரும்பெரும் பொருள்களைப் பலர்க்கும் பயன்படும் பல அரிய பெரிய நூல்களாக எழுதி வெளியிடுவதும் ஆகிய அரும்பெருந் தொண்டை முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்பாகச் செய்துவருதலைத் தமிழ்நாட்டவர்கள் நன்கறிந்திருக்கின்றார்கள். நூல் ஆசிரியர்கள் நூல் இயற்றும் முயற்சியொன்றிலே உறைத்து நின்றால் மட்டுமே அம்முயற்சி செவ்வனே நடைபெறும். நூலாராய்ந்து நூல்இயற்றும் முயற்சியோடு, அந்நூல்களை அச்சிடும் முயற்சியும் அச்சிட்டவைகளை வெளிப்படுத்தும் முயற்சியும் ஒருவரே செய்துவரின், அவர்க்கு அளவிறந்த பாடுந் தொல்லையும் உண்டாகும். மறைமலையடிகள் இனி இத்தனை முயற்சிகளையுந் தாமே நடத்தாமல், நூல் இயற்றும் முயற்சியைமட்டுந் தாம் வைத்துக்கொண்டு, தம்முடைய அச்சுக்கூடத்தையுந் தாம் இயற்றிய நூல்களையும் விற்பனைக்குவிடக் கருதியிருக்கின்றார்கள்.

அடிகளின் அச்சுக்கூடத்தில் உள்ள அச்சு இயந்திரமும் தமிழ் ஆங்கில எழுத்துக்களும் புத்தப் புதியவைகள், உயர்ந்தவைகள். தமிழ் எழுத்துக்கள் சீமை ஈயத்தில் வார்த்தவை. ஆங்கில எழுத்துக்கள் [illegible]

# சிறுவர்க்குரிய நாட்கடன்கள்

சிறுவர்கள் எல்லாருங், காலையிற் கிழக்கே வெயில்வெளிச்சந் தோன்றும்போது உறக்கம் நீங்கி எழுதல்வேண்டும். தூக்கம் என்னும் இருளில் அறிவுஇழந்து புதைந்துகிடந்த உயிர்களெல்லாம் அவ்விருளினின்றும் மீண்டெழுந்து அறிவு வெளிச்சம் பெறுதற்கு, அப்போது வெளியே தோன்றும் வெயில் வெளிச்சமே உதவியும் அடையாளமுமாய் இருக்கின்றது. ஆகலாற், காலைப்பொழுதில் ஒருநொடியும் வீண்போகாமல் அந்நேரத்திற் படுக்கையைவிட்டு எழுந்திருக்கும் பழக்கத்தைச் சிறுபருவத்திலேயே பழகிக்கொள்ளுதல் முதன்மையானது.

பள்ளிக்கூடத்திற் பயிலுஞ் சிறுவர்சிலர் இரவின் பிற்பகுதியில் நான்கு மணிக்கெல்லாந் துயில் நீங்கி யெழுந்து தம்முடைய பாடங்களை விடியும்மட்டும் ஓதி, அதன்பிற் கதிரவன் தோன்றும் விடியற்காலையில் மறுபடியும் உறங்குகின்றனர். மற்றுஞ்சிலர், அங்ஙனம் உறங்காமல் தமக்குரிய முயற்சிகளைச் செய்யப் புகுகின்றனர். இவ்வாறுசெய்வது பிசகு. கதிரவன் மேல்பால் மறைந்த மாலைக்காலத்தில்மட்டும் ஒன்பது மணிவரையில் இளஞ்சிறார்கள் தம்முடைய பாடங்களை விளக்கு வெளிச்சத்தில் ஓதலாமேயன்றி, இராக்காலத்தின் பிற்பகுதியில் உறக்கம் நீங்கி அங்ஙனம்ஓதுவது ஆகாது. ஏனென்றால். நூல் ஓதும் மாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இரவின் பிற் பகுதியிலேதான் அயர்ந்த தூக்கம் நிகழ்கின்றது; அப்போதுதான் அவர்களுடைய மூளையானது இனிதாக ஆறுதலுற்றிருக்கின்றது. மக்கள் மட்டுமேயன்றி எல்லாச் சிற்றுயிர்களும் அந்நேரத்தில் இனிய துயிலில் அமர்ந்திருக்கின்றன. கதிரவன் எழுதற்கு முற்பட்டதாகிய அவ் வைகறைப்பொழுதில் வீசுங் குளிர்ந்த மெல்லியகாற்றானது, அத்துயிலுக்கு இனியதாய், எல்லா உயிர்கட்கும் பெரியதோர் ஆறுதலைத் தருகின்றது. அவ்வளவு அமைதிக்கு ஏற்ற அந்நேரத்திற் கண்விழித்திருந்து நூல் ஓதுவதும் வேறுமுயற்சிகளைச் செய்வதும் மூளையின்வலிவைக் குறைத்து உடம்பின் நலத்தையுஞ் சிதைக்கும். விடியும்முன் விழித்திருந்து நூல் ஓதிய மாணாக்கர்க்குத் தலை

வலியும் மயக்கமுங் காய்ச்சலும் வயிற்றுளைச்சலும். அடுத்தடுத்து வருதலை யாம் பலகாற் கண்டிருக்கின்றேம். அதுவேயுமன்றிப், பாரிஸ்மாநகரத்திலுள்ள ஆசிரியர்கள், தம்மாணக்கர்களை விடிய இரண்டொரு மணிநேரத்திற்கு முன்னமே படுக்கையினின்றும் எழச்செய்து நூல்ஓதப் புரிந்துவந்த காலங்களிலெல்லாம், அவர்கள் பகற்பொழுது முழுதுந் தூக்கமயக்கம் உடையராயுஞ் சுருசுருப்பு இல்லாதவராயும் இருந்தனரென்றும், அங்ஙனஞ்செய்யாது விடியும்வரையில் அவர்கள் அயர்ந்து தூங்குமாறுவிடுத்து, விடிந்தபின் அவர்கள் தாமாகவேயெழுந்து தத்தங்கடமைகளைச் செய்யுமாறு ஒழுங்குசெய்தபிறகே அவர்கள் தெளிந்த அறிவுஞ் சுருசுருப்புமுடையராய் ஒழுகினரென்றுந் தெரிவித்திருக்கின்றனர். ஆகவே, பகலவன் கிழக்கே தோன்றுங் காலை ஆறுமணிக்கெல்லாஞ் சிறுவர்கள் தாமாகவே உறக்கம் நீங்கி யெழுதலே நன்றென்று உணர்ந்துகொள்க.

அங்ஙனந் துயில்நீங்கி எழும்போதே ஒளிவடிவான கடவுளை நினைந்து வணங்குக. கடவுளை நினைந்து உருகிய பெரியோர்கள் அக்கடவுள்மேற் பாடிய இரண்டொரு பாடல்களை மெல்லிய இனிய குரலிற் பாடி அவரைவணங்குதல் மிகநன்று. தன்னினுஞ் சிறந்த, தன்னைப்படைத்த ஆண்டவனது அருளொளியை இவ்வாறு காலையில் தன் அறிவு மலருங்காலத்திலேயே நன்றியுடன் நினைந்து குழையும் நெஞ்சுடைய ஒருவனுக்கு அந்நாள் முழுதும் அவன் அகத்தும் புறத்தும் அருள்மணங் கமழ்ந்துகொண்டிருக்கும். அவனது அறிவு துலக்கமாய் இருக்கும். அவன் எந்த நன்முயற்சியிற் புகுந்தாலும் அது செவ்வனே நிறைவேறும். அவனைக்காண்பவர்கள் எல்லாரும் அவன்மீது அன்புடையராவர்.

இவ்வாறு கடவுளைத்தொழுதபின் குளிர்ந்த நீர்கொண்டு கண்களைக் கழுவித்துடைத்துவிட்டுக், கண்ணாடியில் தன்முகத்தையும், அதன்பின் இரவிவன்மரையொத்த சிறந்த ஓவிய ஆசிரியர் வரைந்த அழகிய ஓவிய உருவங்களையும் உற்றுநோக்கிமகிழ்க. உள்ளமானது வேறுநினைவுகளாற் கலக்குறாது தெளிவாயிருக்கும் விடியற்காலையிலே இங்ஙனம் அழகிய உருவங்களைப் [illegible] நாளேற நாளேற அழகிய



உருவும் விழுமிய அறிவுஞ் செழுவிய செயலும் உடையராகுவர்.

அதன்பிற் கட்டாயமாகச் செய்தற்குரியது வயிற்றிலுள்ள மலச்சக்கையை வெளிப்படுத்துவதேயாகும். சிறுவர் சிலர் பலர் காலையில் இதனைச்செய்யாமல் ஓதுதல் எழுதுதல் முதலான முயற்சிகளைச் செய்துவிட்டு, அதன்பின் மலங்கழிக்கச் செல்கின்றனர். விடியற்காலையிலேயே வெளிப்படவேண்டிய சக்கை வெளிப்படாமற் குடருக்குள் இருக்குமாயின், அது கருங்குடரைப் புண்படுத்துவதுடன், இரத்தத்தையும் நஞ்சாக்கும். அதனால் மூலச்சூடும் கண்ணெரிவும் மேனியெங்குஞ் சொறிசிரங்கும் ஒவ்வொருகால் வயிற்றுளைவும் உண்டாகும். ஆகலாற், காலையிற் செய்யவேண்டிய முதன்முயற்சி மலநீர் கழித்தலேயாம்.

நகரங்களில் உள்ள மாணக்கர்கள் தம் வீட்டுக்குப்புறம்பே சென்று குடரைத் துப்புரவுசெய்தல் இயலாது. ஆனால், நகர்ப்புறங்களிலும் நாடுகளிலும் இருப்பவர்க்கோ அவ்வசதியுண்டு. ஆகையால், அத்தகையவர்கள் காலையில் ஒருகல் தொலைவுக்குக் குறையாமல் நடந்துசென்று, ஒதுக்கிடங்களிற் குடரைத் துப்புரவுசெய்து திரும்புக. இல்லங்களிற் கட்டுப்பட்டு நிற்கும் நச்சுக்காற்றையே எந்நேரமும் உள்ளிழுக்குஞ் சிறுவர்க்கு, இங்ஙனம் வெளியே செல்வதால் தூயகாற்றை உட்கொள்ளுஞ் சிறந்தநன்மை உண்டாகின்றது. அதனொடு, கை கால் முதலிய உறுப்புகள் நன்கு அசைந்து உடம்புக்கும் வலிவையும் நலத்தையுந் தருகின்றன. நகரங்களில் உறையுஞ் சிறுரும் இயன்றமட்டுங் காலைமாலை வேளைகளில் உலாவுதல் நடத்தல் ஓடல் குதித்தல் பந்தாடல் முதலிய உடற் பயிற்சிகளில், தமதுடல் நலத்திற்கும் ஒழிவு நேரத்திற்கும் வேண்டுமளவு கட்டாயம் பழகிவரல் வேண்டும்.

குடரைத் துப்புரவு செய்தபின், ஆலங்குச்சி வேலங்குச்சி நுணாஇலை முதலியனகொண்டு பற்களை நன்றாகத் தூய்மை செய்க. இவை அகப்படாக்கால், வெள்ளிய பட்டுப்போன்ற தூயசாம்பலை வடிக்கட்டி வைத்துக்கொண்டு, அத்தூளையிட்டுப் பல்துலக்கலாம். அல்லது உப்பும் அடுப்புக்கரியுஞ் சேர்த்து

210468

அரைத்துப் பொடிகொண்டும் பல் தேய்க்கலாம். இவைகளைத் தவிரப், பலராற் செய்துவிற்கப்படும் பற்பொடிகளைப் பயன்படுத்துதல் நன்றன்று.

அதற்குமேல், வெந்நீரிலாயினும் தண்ணீரிலாயினும் நீராடுக. சீயக்காய்ப் பொடி கொண்டாவது, வெள்ளைச் சோடாச் சவுக்காரங்கொண்டாவது உடம்பைச் [illegible] அழுக்கையுங் கழுவிவிடுக. தலைக்கு நெய்யானது வாரந் தேய்த்து முழுகல் வேண்டுமாதலால், எள்நெய் தேங்காய்நெய் வாதுமைநெய் ஆவின்நெய் முதலியவற்றுள் எது கலப்பற்றதாகக் காணப்படுகின்றதோ அதனைப் பயன்படுத்திக்கொள்க. நெய்ம்முழுக்குச் செய்யும்போது வெந்நீரில் முழுகுதலே மிகச் சிறந்தது. நெய்ம்முழுக்கு ஆடியநாட்களில் நீர்க் கோவையினை விளைக்கும் குளிர்ந்த உணவுப்பண்டங்களை விலக்கிவிடுக; அங்ஙனமே அந்நாட்களில் மூளைக்கும் உடம்புக்கும் மிகுந்த உழைப்பினைத் தருவதும் பகல் தூக்கமும் மாணுக்கர்க்கு ஆகாது.

[illegible] தோய்த்துலர்ந்த தூய ஆடைகளையே உடுக்குக. ஒருநாள் கட்டியிருந்த ஆடையைப் பின்னாளில் உடுத்தல் சிறிதும் ஆகாது. உடம்பினின்று வெளிப்படும் பல்லாயிரக் கணக்கான [illegible] உடம்பிலிருந்து வெளிப்பட்டு ஆடைகளிலிருந்து [illegible] ஒருநாள் உடுத்த ஆடைகளில் ஒட்டியிருக்குமாதலால், அவைகளை அறவே விலக்கித் தூயவைகளை மாற உடுக்குக.

இவ்வாறு [illegible] இவையனைத்தும் முடிந்ததும், காலை வேளையில் எளிதாகச் செரிக்கத்தக்க சிற்றுணவை அளந்து இசைக்குமோ அத்துணையே உட்கொள்க. ஆனாலும், காப்பி தேயிலை கொக்கோ முதலிய பருகுநீரில் நோய்க்குரிய தீமை உளதென்று ஆசிரியர் சிலர் ஆராய்ந்து உரைத்தலால், அவைகளை முற்றும் விலக்கிவிடுதல் வேண்டும். அவற்றிற்கு மாறாகக், கொத்துமல்லி நன்னாரிவேர் ஏலக்காய் என்னும் மூன்றும் கலந்து இடித்ததுளை நீரிலிட்டுக் காய்ச்சிக் காய்ச்சிய நீரை வடிகட்டி ஆவின்பாலும் பனங்கற்கண்டுஞ் சேர்த்துப் பருகுக. இது மிகவுங் குளிர்ச்சிசெய்வதாகக் காணப்



பட்டால், சுக்குத்தூளும் அவற்றொடு கலந்துகொள்ளலாம். இங்ஙனஞ் செய்துகொள்ள இயலாதவர்கள் ஆவின்பால் சேர்த்த பச்சரிசிக்கஞ்சி குடிப்பது நன்று. அதுவுஞ்செய்ய இயலாதவர்கள் பழையசோறு சிறிது உட்கொள்ளுதல் நன்று.

இவ்வளவும் ஒன்று அல்லது ஒன்றரைமணிநேரத்திற்குட் செய்து முடித்துக் கொள்ளலாம். காலையில் ஆறுமணிக்குத் துயிலினின்றெழுந்த ஒருசிறுவன் ஏழு அல்லது ஏழரைமணிக்கு மேற்கூறிய காலைக்கடன்களை ஒழுங்காகச் செய்துமுடித்துக் கொண்டு, அதன்பிறகு தன்பாடங்களை ஓதத் துவங்கல்வேண்டும். பாடம் ஓதும்போது தன்கருத்தை வேறொன்றிலுஞ் செல்லவிடாமல், எந்தப்பாடத்தில் எந்தப்பொருள் சொல்லப்படுகின்றதோ அதில் தன்நினைவைப் பதித்தல்வேண்டும். நினைவைப் பலவிடங்களிற் சிதறவிட்டுக்கொண்டு, தவளைபோல் எவ்வளவு கூவிப்பயின்றாலும், பாடப்பொருள் மனத்திற் பதியமாட்டா. உரத்துக்கூவாமல் மெல்லியகுரலிலாவது, அன்றி வாய்திறவாமல் அமைதியாயிருந்தாவது பாடப்பொருளையுஞ் சொல்லையும் நினைவில் ஏற்றுதல்வேண்டும். அதனொடு ஒவ்வொருசொல்லுக்கும் பொருள் செவ்வையாகத் தெரிந்துகொண்டு பயிலுதல் முதன்மையானது. இதற்கு அகராதியைப் பக்கத்திலேயே வைத்துக்கொண்டு, சிறிதுஞ் சோம்பாது, தெரியாத சொற்பொருள்களை அதன்கட் பார்த்துப் பார்த்துத் தெரிந்துகொள்க. அன்றாடம் பாடத்தில்வரும் அருஞ்சொற் பொருள்களையும், முதன்மையாக நினைவில் வைக்கவேண்டிய பகுதிகளையும், பாடச்சுருக்கங்களையும் ஒருகுறிப்பேட்டில் அவ்வப்போது குறித்துவைத்துக்கொண்டு, அவைகளைப் பின்நாட்களில் திருப்பித் திருப்பிப்பார்த்து நினைவுக்குக் கொண்டுவருக.

கடைக்குப்போதல், தோட்டம் வைத்தல், ஓவியம் எழுதுதல் முதலானபயிற்சிகளைச் செய்தற்கு நேரம் மிகுதியாய் வேண்டுமாதலால், முதலிலேயே இவைகளைத் துவங்கிவிடாமல், விரைந்துபடிக்கக்கூடிய பாடங்களை முதலில் முடித்துப்பயின்று, அதன்பின் இவைகளைச் செய்து பழகுக. அவ்வாறின்றி, முதலிற் கடைக்குப்போதல் முதலான பயிற்சிகளைச்செய்து நேரத்தைக் கழித்துவிடும் மாணுக்கர்கள் பின்னர் ஓதவேண்டிய ப

பாடங்களுக்கு நேரம்இல்லாமையால் அவற்றைப் பயிலாமலே பள்ளிக்கூடஞ் சென்று ஆசிரியரால் ஒறுக்கப் படுதலுடன், ஆராய்ச்சியிலுந் தவறிவிடுகின்றனர். ஆதலால், முதலில் எளிதாகப் பயின்றுகொள்ளத் தக்கவைகளையே தெரிந்து பயிலுதல் வேண்டும்.

இவ்வாறு ஒன்பது அல்லது ஒன்பதரை மணிவரையில் அன்றாடப்பாடங்களையும் பழம் பாடங்களையும் பயின்றபின், நேரந்தவறாமற் பத்துமணிக்கெல்லாம் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்குப் போய்த், தத்தம் வகுப்புகளில் தத்தம் ஆசிரியரை அன்புடன் வணங்கி அமைதியாயிருந்து, அவர் கற்பிப்பவைகளை அவாவுடன்கேட்டு உள்ளத்தில் நன்குபதித்தும், அவர் கேட்கும் வினாக்கட்குப் பொருத்தமான விடைகள் மொழிந்துந், தம்மோடு உடன்பயிலும் மாணாக்கருடன் அன்புடன் கேண்மைகொண்டும் ஒழுகுதல்வேண்டும்.

இக்காலத்திற் பெரும்பாலும் எல்லாப் பள்ளிக்கூடங்களுங் காலை ஒன்பதரை அல்லது பத்துமணிக்குத் துவங்குவதால், அவைகளிற்பயிலும் மாணாக்கர்களுக்கும், அம்மாணாக்கர்களைப் பயிற்றும் ஆசிரியர்களுக்குங் காலைக்கடன்களைமுடித்து அன்றாடப் பாடங்களைப் பார்த்து உள்ளத்தில் அமைத்துக்கொண்டு வருதற்கு நேரமும் வசதியும் இருக்கின்றன. ஆனாற், சிலபல திண்ணைப் பள்ளிக்கூடங்கள்மட்டுங் காலைஎட்டுமணிக்கெல்லாந் துவங்குகின்றன. அப் பள்ளிக்கூடங்கட்குச் செல்லும் பிள்ளைகள் மிகச்சிறிய பருவத்தினராய் இருத்தலால், அவர்கள் மேற்கூறிய காலைக்கடன்களை யெல்லாந் தெரிந்து செய்யக்கூடியவர் அல்லர். என்றாலும், அவர்தம் பெற்றோர்கள் அவர் செய்யக்கூடியவைகளை ஒழுங்காகச்செய்து பள்ளிக்கூடஞ் செல்லும்படி பழக்கிவருதல் முதன்மையானது.

இனிப், பகல்உணவு எடுப்பதற்கென்று கொடுக்கப்படும் ஒருமணிநேர ஒழிவுநேரத்திற், சிறுவர்கள் உணவுகொண்டபின், தம் தோழர்களுடன் இனிதாக விளையாடல்வேண்டும். ஒருவரை யொருவர் பகைத்தலுந் திட்டுதலும் அடித்தலுங் கூடா. கெட்ட நடவடிக்கையுள்ள பிள்ளைகளுடன் நேசங்கொள்ளுதலும் ஆகாது, பகைத்தலும் ஆகாது. அவர்களுடன்



நேசங்கொண்டால் அவர்களுடைய தீய இயற்கை உமக்கும் படிந்துவிடும்; அவர்களுக்கு வருந்துன்பம் உம்மையுஞ்சாரும். அவர்களைப் பகைத்தாலோ, அவர்கள் உம்மைப்பழிப்பர், ஏசுவர், அடிப்பர், பிறரைஏவியும் உமக்குத் தீங்கு செய்வர். ஆதலால், அவ்விருவகையிலும் அவர்களுடன் தொடர்புகொள்ளாமல், அவரைக் காணநேரும்போதெல்லாம் இனிமையாகச் சில சொற்களைப் பேசிவிட்டுப் போய்விடுக.

இனிப், பிற்பகல்முடிவிற் பள்ளிக்கூடம்விட்டு வீட்டுக்குத் திரும்பும்போதுந் தம் தோழர்களுடன் அமைதியாய்த் திரும்பல்வேண்டும். வீட்டுக்கு உடனேதிரும்பாமல் மைதானங்களில் விளையாடுதற்கேனுங், கடற்கரைகளில் உலவுதற்கேனுங், கடைத்தெருவுகளிற் பண்டங்கள் வாங்குதற்கேனும், ஏரி குளம் கூவல் கால்வாய் ஆறுகளில்நீராடுதற்கேனுஞ் செல்லவேண்டியிருந்தால், அங்ஙனஞ் செல்வதைக் காலையிலேயே நம்பெற்றோர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் நம்மைத் தேடியலைந்து துன்புறாமற் செய்தல்வேண்டும். மேற் குறிப்பிட்ட இடங்களில் விளையாடுவதா யிருந்தாலும், மனமகிழ்வாய்ப் பொழுதுபோக்குவதா யிருந்தாலும், அல்லது நமக்கு வேண்டுபவைகளை வாங்கிப்போவதா யிருந்தாலும், நமதுடம்பைப் பழுதுபடுத்திக் கொள்ளாமல், நோயைவருவித்துக் கொள்ளாமல், வண்டி குதிரை மாடு முதலியவற்றிற்கு இடையே செல்லாமற், கடைகளிற் பண்டங்களைக் களவு செய்யாமற், பொய் பேசாமல், நமக்கும் நம் நண்பர்க்கும் நம்பெற்றோர்க்குந் தீங்குந் துன்பம் உண்டாகாமல் அறிவாய் நேர்மையாய் நடந்துகொள்க. மாலையில் இருண்டுபோனபின் வெளியிடங்களிற் செல்வதும் இருப்பதும் மாணாக்கர்களுக்குச் சிறிதும் ஆகா. சிலகால் இருளிற் போகநேர்ந்தாற் கையில் விளக்கில்லாமற் போகலாகாது. இன்னநேரத்தில் வீட்டுக்குத் திரும்புவோம் என்று பெற்றோர்களிடஞ் சொல்லிவந்தபடி, தவறாமல் அந்நேரத்தில் வீட்டிற்குத் திரும்பிவிடுதல் இளைஞர்க்குப் பெருங் கடமையாகும்.

இங்ஙனம் மாலையில் வீட்டிற்கு வந்தபின்னாவது அன்றி வருதற்குமுன்னாவது வயிற்றிலுள்ள மலச்சக்கையைக் கழித்து

விடுதல்வேண்டும். பள்ளிக்கூடப்பிள்ளைகள் காலை மாலை இருபொழுதுந் தவறாமல் மலச்சக்கை கழிக்கும்பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வார்களானால், அவர்கட்கு எத்தகைய நோயும் வராது. இக்காலத்து இளைஞர்கள் ஆண்டு முதிராமுன்னரே மூக்குக்கண்ணாடி இடுவது, மலச்சக்கைநீக்கி உடம்பைத் துப்புரவாக வைத்துக் கொள்ளாமையினாலேதான். மலக்குடலில் அழுக்குச் சேரச் சேரக் கண்ணொளிமழுங்கும்; மூளை தெளிவாய் இராது. ஆதலால், மாணாக்கர்அனைவருந் தமது மலக்குடலை இரண்டுவேளையுந் துப்புரவுசெய்வதிற் கருத்தாயிருக்க வேண்டும். அதிற்கருத்தில்லாத பிள்ளைகளை அவர்தம் பெற்றோர்கள் கருதிப்பார்த்தல் கட்டாயமானது.

மாலையில் இல்லந்திரும்பிய பின் கட்டியிருந்த ஆடைகளைக் களைந்துவிட்டுத் தூயன உடுத்து, இறைவனை வணங்கி, நல்லசிற்றுண்டி சிறிது அருந்தி, இளைப்பாறி, ஒளிமிகுதியுமுள்ளதொரு விளக்கு வெளிச்சத்தில், அதனொளி நேரே கண்ணுட்படாமல் ஒருபச்சைக் காகிதத்தாற் சிறிது அதனை மறைத்து வைத்துக்கொண்டு, பாடங்களை ஓதுதல்வேண்டும். சாய்ந்து கொண்டும், படுத்துக்கொண்டுங், குனிந்துகொண்டும் ஓதாமல் நேரிருந்துஓதுக. ஓரேயிருப்பாயிருந்து ஓதாமல் முக்கால் மணி நேரத்திற்கு ஒருகாற் பாடத்தை விட்டெழுந்து, கண்களைக் குளிர்ந்தநீராற் கழுவி, ஐந்துநிமிஷம் உலவி, அதன்பின் ஓதுக. இவ்வாறு மாலையில் ஒன்பது அல்லது ஒன்பதரைமணி வரையிற் பாடங்களைச் செவ்வையாகப் பயின்று, அதன்பின் உணவுகொண்டு உலவி உறங்குக.

இங்ஙனமாகப் பகற்பொழுதையும் இரவின் முற்பொழுதையும் ஒழுங்காகப் பயன்படுத்த வேண்டியிருக்கச், சிறுவர்களிற் பெரும்பாலார் முறை தவறி அப்பொழுதுகளை வீணே கழித்துவிட்டு, இரவில் வயிறுநிறைய உணவுகொண்டபிற் கண்விழித்திருந்து பன்னிரண்டு ஒருமணிவரையிலும், அல்லது விடியும்முன் நான்குமணியிலிருந்து காலை ஏழுமணி வரையிலும் நூல் ஓதுகின்றார்கள். இப்படிச்செய்பவர்கள் எல்லாருங் கண்ணோய் வயிற்றுநோய் மண்டைக்கிறுகிறுப்பு காய்ச்சல் இருமல் முதலியநோய்களால் அடுத்தடுத்துத் துன்புறுத்தப் பட்டுக்



உதவிகொண்டு, அவர்தருங் கருவியினாற் கீழிறங்கிய கருப்பையினை மேலேற்றுவித்து, அவர் சொல்லுமாறு நடப்பராயிற், கீழிறங்கி நெடுநாட்பட்ட கருப்பையும் மேலேறுதல் கூடுமென்க.

இனி, உடம்பின்மேல் எந்தப் பகுதியில் எந்த உறுப்பிற் சிரங்குகள், கட்டிகள், புண்கள் வந்தாலும் அவற்றைத் தீர்க்கும் முறை காட்டுவாம். மேலேசொல்லிய முறைகளின்படி கருத்தாய் நடந்து வருவார்க்கு இவை வராவென்பது திண்ணமேயாயினும், அம்முறைகளை அறியாமையாலோ, அறிந்தும் அவற்றின்படி நடவாமையாலோ சிரங்குகள், கட்டிகள் வரப் பெற்றார்க்கு அவற்றைத் தீர்க்கும்முறை காட்டுதல் அறமாயிருக்கின்றது. உடம்பின்மேல் எந்த இடத்திற் சிரங்கு வருவதாயிருந்தாலும், அங்கே முதலிற் சிறிது வலிதோன்றும்; வலிதோன்றியவுடன் வாளாஇராமல் நீரேற்றி கொண்டேனும் மலக்கழிவு மருந்து அருந்தியேனும் மலக்குடலைத் துப்புரவு செய்க. ஆவின் பாலும் வாற்கோதுமை மாவுங் கலந்து செய்த கஞ்சியை உச்சிப்பகலில் மட்டும் பருகி, மற்றுக் காலைப் பொழுதிலும் இராப் பொழுதிலும் ஏதும் உணவெடாது பட்டினியாய் இருக்க. அதனொடு, வலியுள்ள இடத்தைக் காலை மாலை இருபொழுதுகளும் நன்றாய்ச் சுடச் சுட நீராவியிற் காட்டி வியர்க்க வைத்துப், பின்னர்க் குளிர்ந்த நீர்விட்டு அவ்விடத்தைக் கழுவி, ஈரத்தைத் துணியாற் றுடைத்துவிடுக. இவ்வாறு மூன்றுநாட் செய்யவே, அவ்வலி தீர்ந்துபோகும்; அவ்விடத்திற் கட்டியும் வராது. எமக்கும் எம்மைச் சார்ந்தார் பலர்க்குஞ் சிரங்குகள் பருக்கள் கட்டிகள் வரும் அடையாளங்கள் கண்டபோதெல்லாம் இங்ஙனமே செய்து அவை வாராமற் றடை செய்து கொண்டேம்.

ஆனாலும், இம் முறைகளைக் கடைப்பிடியாய்ச் செய்யாமல் வழுவிப் போனார்க்குச் சில நாட்களிலெல்லாம் வலிகண்ட இடம் புடைத்துக் கட்டி யுண்டாகும். அவ்வாறு கட்டி யுண்டாகி அதனுட் சீழ் பிடிக்குங்கால் ஆற்றொணாவலியுந் துன்பமும் விளையும். புடைத்துக் கட்டியுண்டாகத் துவங்கியபின் எவ்வளவு நீராவி வேது பிடித்தாலும் அது தீராது. என்றாலும், அந்நிலையிலும் நீராவிவேது பிடித்தலே கட்டாயமாகச் செயற்பாலது; ஏனென்றால், வேது பிடியாவிட்டாற் கட்டிதிரண்டு பழுக்க நீண்ட நாட்

செல்லும்; பொறுக்க முடியாத வலியும் உண்டாகும். வேது முறையாகப் பிடித்து வந்தாற், கட்டி விரைவிற் றிரண்டு பழுப்பதுடன் வலியுங்குறையும். இன்னும், அதைத் தப்புடைத்த கட்டி சீழ் பிடிக்குங்கால், அச்சீழ் நரம்புகளின் ஊடே புரையோடிச் சென்று அடுத்துள்ள உறுப்புகளையும் பழுது படுத்திவிடும்; அங்ஙனம் ஆகாமற் பாது காப்பதற்கும் நீராவிவேது பெரிதும் உதவி செய்கின்றது. இங்ஙனம் வேதுபிடித்து வரும்போது சிலகால் அக்கட்டி கரைந்து மறைந்துபோதலும் உண்டு. அப்படியாகா விட்டால் அது நன்றாய்ப்பழுத்து வரும்; இரத்தத்திலுள்ள நச்சு நீரெல்லாம் அதன்கண் வந்து திரண்டு சீழாய் நிற்கும். இவ்வாறு திரண்டு கட்டி பெருக்கப் பெருக்க அது தானாகவே உடைந்து சீழ் முழுதும் வெளிப்பட்டு விடும். வேது பிடித்துக் கட்டிபழுக்கத் துவங்குகையில் மற்றொன்றுஞ் செய்தல் இன்றியமையாதது. அதாவது: கேழ்வரகு மாவை ஓர் இருப்புக் கரண்டியில் இட்டு, அதிற் சிறிதுநீர் கலந்து, கரண்டியை நெருப்பின்மேல் வைத்து, மாவைக் கிண்டிக் காய்ச்சிக் குழைவான பதத்தில் இறக்கி, ஓர் இலையிலாயினும் வாழைச் சருகிலாயினும் அந்தமாவைத் தடவிப், பொறுக்கக்கூடிய சூட்டில் அதனைக் கட்டிமேல் வைத்து ஒரு துணிக்கிழியினாற் கட்டிவிடுக. இது கட்டிப் பதினைந்து அல்லது இருபது நிமிஷம் ஆனபின், மறுபடியும் அங்ஙனமே கேழ்வரகு மாவைக் கிண்டி யெடுத்துக் கட்டிமேல் வைத்துக் கட்டுதல் வேண்டும். இங்ஙனமாக ஒரு நாளிற் பலமுறையுங் கேழ்வரகு மாவைக் கிண்டிக் கிண்டியெடுத்து அக்கட்டிமேற் கட்டிவரவே, இரண்டு அல்லது மூன்றுநாட்களில் அக்கட்டி நன்றாய்ப்பழுத்து உடைந்துவிடும். உடைந்தபின் ஓர் ஏனத்தில் வெந்நீரை வைத்துக்கொண்டு, ஒரு தூய கந்தைத்துணியை அதில் நனைத்தெடுத்து, அதனால் அக்கட்டியைச் சுற்றி அதுக்கி அதுக்கி, அதிலுள்ள சீழையுஞ் செந்நீரையும் வெளிப்படுத்திக் கழுவி விடுக. அதன் பின் ஈரத்தைத் துலர்த்திவிட்டு, மறுபடியுங் கேழ்வரகு மாவைக் கிளறிக் குழைந்தபதத்திற் சூடாக வைத்து அடுத்தடுத்துக் கட்டி வருக. சீழுஞ் செந்நீரும் நின்று உடைந்தகட்டி செம்புண் பட்டு ஆறத்துவங்கிய பின்னர்க் கேழ்வரகு மாவைக் கிண்டி இறுகிய பதத்தில் எடுத்து, அப்புண்ணின்மேல் வைத்துப் பலகாற் கட்டி



வரல்வேண்டும். பின்னர் இரண்டு மூன்று நாளிற் புண் தானாகவே காய்ந்து விடும். கட்டி உடைந்து ஆறத்துவங்கும் மட்டுங் கேழ் வரகு மாவை இளகிய பதத்திலும், ஆறத் துவங்கியபின் அதனை இறுகிய பதத்திலும் வைத்துக் கட்டுதலை நினைவிற் பதித்துக் கொள்க. இங்ஙனங் கேழ்வரகுமாக் கட்டும்போதுங் கட்டிக்குக் காலை மாலை வேது பிடித்தலையுட், ஒவ்வொரு நாளும் மாலையில் நீரேற்றிக்கொண்டு மலக் குடரைத் துப்புரவு செய்தலையும் மறவற்க. வயிற்றிலும் உணவையும் நீரையும் மிகுதியாய் ஏற்றிப் பசித்தீயை அவித்து விடாமற், சிறிதாக அவற்றை யுட்கொண்டு பசித்தீ கொழுந்துவிட் டெரிந்து உடம்பின் அகத்துள்ள நச்சு நீரை உறிஞ்சி விடுமாறு செய்தல் மிகவும் இன்றியமையாதது.

நோயுள்ள காலங்களிலாயினுங், கட்டி சிரங்கு புண் முதலிய வற்றால் துன்புறுங் காலங்களிலாயினும், அவற்றை மிகுதிப்படுத்துங் காப்பி தேநீர் கோக்கோ முதலான நச்சுக் குடிநீர்களையும், ஊனையும், மயக்கப் பொருள்களையும் மக்கள் அருந்தாதிருப்பாராக! தமது உடல்நலத்தின் பொருட்டாகவேனும் இந்நஞ்சுகளை நீக்கமாட்டாமல் அவற்றை ஆராவேட்கையுடன் உட்கொள்ளும் மாந்தர்கள், பெருங்குற்றமில்லாத உயர்ந்தோரிடத்துங் குற்றங்கள் ஆராய்வதும், அவரைப் பழித்தலும், அவர் மேற் புறங்கூறுதலும், அவர்க்கு அறிவுரை கூற வருதலும் எத்துணைப் பேதைமை! எத்துணை இறுமாப்பு!

இனி, மேற் சொல்லியவாறு எத்தகைய கட்டிகளையும் புண்களையும் எளிதிலே விரைவிற் றீர்த்துக் கொள்வது எவர்க்கும் இயல்வதாகவும், அவ்வாறு செய்தலைவிடுத்து, நம்மனோரிற் கற்றவர்களுங் கூட ஆங்கில மருத்துவர்களைப் பெரும் பொருள் கொடுத்து வருவித்து, அவற்றை ஆழமாக அறுப்பித்தும் புண்களினுள்ளே எரிமருந்து தடவிய திரிச்சீலைகளை நுழைப்பித்தும் பல நாட்கள் தொடர்பாகச் சொல்லொணாத் துன்பத்திற் கிடந்து நாறி நலங் குலைந்து உழல்வதோடு, ஐயோ! உயிரிழந்தும் மாய்கின்றார்களே! கட்டிகளை ஆழமாக அறுப்பிப்பதும், புண்களினுள்ளே திரிச்சீலைகளை நுழைப்பிப்பதுஞ் சிறிதும் ஆகா. யாம் மேலே காட்டிய முறைப்படி செய்து நன்றாய்ப் பழுக்கவைத்த கட்டிகளின் மேற்றோல் சிலர்க்கு அழுத்தமாயிருத்தலால், அக்கட்டி

கள் உடைவதில்லை அத்தகையவர்க்கு மட்டும் நன்றாய்ப்பழுத்த கட்டிகளின் மேற்றோலைக் கூரிய கத்திமுனை கொண்டு கீறி விடலாம். அவ்வளவேயன்றி, அவர்க்குங்கூட அக்கட்டிகளை ஆழமாக அறுத்தல் ஆகாது; திரிச்சீலையும் அவற்றுள் நுழைத்தலாகாது. எம்மவர்க்கு வந்த மிகக்கொடிய கட்டிகளையும் எம்முடைய முறைகளால் எளிதிற் றீர்த்த உண்மை நிகழ்ச்சிகள் சிலவற்றை ஈண்டெடுத்துக் கூறுதும்.

பதினேழு ஆண்டுகளுக்குமுன் எம்மனைவியின் மார்பிற் குழவி பால் உண்ணும் ஒருபகுதியில் ஒரு கட்டியுண்டாயிற்று. அதற்கு நீராவிவேது தொடர்பாய்ப் பிடிக்கவே அஃது அமுங்கிப் போயிற்று. பின்னுஞ் சிறிதுகாலம் பொறுத்து மீண்டும் அதே இடத்தில் அக்கட்டி வந்தது. மறுபடியும் அதற்கு நீராவிவேது பிடித்து வரவே, மறுபடியும் அது மறைந்து போயிற்று. அதன் பிற் சிலகாலங் கழித்து அவ்விடத்திலேயே மீண்டும் அக்கட்டியுண்டாயிற்று. இம்முறை தொடர்பாக வேது பிடிப்பித்தும் அது கரையாமல் வர வரப் பெரிதாகிச் சொல்லொணாப் பெருந்துன்பத்தை விளைப்பதாயிற்று. பெண்பாலார்க்குக் குழவி பாலுண்ணும் இடத்திற் கட்டி புறப்பட்டால், அவர் பிழைப்பது அரிது என்றுபலரும் அச்சுறுத்தினர். ஆங்கிலமருத்துவர்களோ "அதனை அறுத்துத்தான் தீர்க்கவேண்டும்; அறுத்தாலோ நன்மையுண்டாயினும் ஆகலாம், தீமையுண்டாயினும் ஆகலாம்" என்று ஐயமாகவே கூறினர். இந்த இடர்ப்பாடான நிலையில் ஏது வரினும் வருக என்று இறைவனை யுன்னி, எம்மனைவியார்க்கு யாமே எம்முடைய முறைகளைச் செய்யத்துவங்கினேம். நாடோறும் மாலையில் நீரேற்றிகொண்டு அவரது மலக்குடலைத் துப்புரவுசெய்வித்தும், காலை நண்பகல் மாலையென்னும் மூன்றுபொழுதுகளுங் கட்டியுண்டாயிருந்த இடத்திற்கு வேது பிடிப்பித்தேம். வேதுபிடிப்பித்தபின், இருபது நிமிஷம் அல்லது அரைமணி நேரத்திற்கு ஒருகாற் கேழ்வரகுமாவைக் கிண்டி இளகியபதத்தில் எடுத்து, அதனை ஓர் இலையிற்றடவிப் பொறுக்கக்கூடிய சூட்டில் அக்கட்டிமேல் வைத்துப் பலமுறை கட்டுவித்துவந்தேம். சோர்வுண்டாகாமல் எளிதிற் செரிக்கத்தக்க கோதுமை வாற்கோதுமைமாக் கஞ்சியே அவர் உட்கொள்ளச் செய்தேம். இவ்வாறு ஒழுங்



காக முறையாய்ச் செய்துவரவே, மூன்றாம்நாட் கட்டி உருண்டு திரண்டு நன்றாய்ப்பழுத்து வந்துவிட்டது. ஆனாலும், மேற்றோல் உரப்பாகவும் அழுத்தமாகவும் இருந்தமையாற் கட்டியுடைவதற்கு வழியில்லை. கட்டியினுள்ளே சீழ் நிரம்பி விட்டமையால் ஆயிரம் ஊசிகொண்டு துளைத்தாலென்ன ஆற்றொணாப் பெருநோய் உண்டாயிற்று. அருகிருந்தார் எல்லாரும் எம்மனைவியாரை ஆங்கிலமருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்லுமாறு வற்புறுத்தினர். எமக்கோ அஃது இசையவில்லை. குழவி பாலுண்ணும் இடத்தில் அக்கட்டி இருந்தமையால் எம் மனைவியாரும் அங்குச் செல்லாராய் எம்மையே அதனை அறுத்து விடும்படி வேண்டினர். நன்றாய்ப்பழுத்தகட்டிகளைக் கீறிவிடும் பழக்கம் எமக்கு முன்னமே யிருந்தமையால், யாமும் அவ்வாறு செய்தற்குச் சிறிதும் அஞ்சாது, அதனைக்கீறிவிட முனைந்தேம். இதுகண்டு எம் பிள்ளைகளும் பிறரும் அஞ்சி எம்மைவிட்டு இல்லத்திற்குப் புறம்பே சென்றுவிட்டனர். யாமோ ஓர் ஏனத்தில் வெந்நீர் கொணர்ந்து, சில தூயகந்தைத் துணிகளும் பக்கத்தில் வைத்தேம். அதன்பிறகு எம்மிடம் உள்ள மிகக்கூரிய ஒரு சிறு கத்தியினைக் கையிலெடுத்து, இறைவனை வணங்கி, எம்மனைவியார் கண்களை மூடிவிட்டு, அக்கட்டியின் அழுத்தமான மேற்றோலை நன்கு கீறிவிட்டேம். அங்ஙனங் கீறிவிட்டபோது உண்டான நோய் பொறாமல் அவர் துடித்ததுடிப்பு இன்னும் எமது நினைவைவிட்டு அகலவில்லை. கத்தியை அழுத்தாமல் மேற்றோலைக் கீறிவிட்டதற்கே இத்தனை துடிப்பு உண்டாகுமானால், அழுத்திக் கட்டியை ஆழத்தில் அறுத்தால் எத்தனைப் பெருந்துன்பம் உண்டாம்! அதன்மேலும், அக்கட்டியின் அறுத்தவாயினுள்ளே எரிமருந்து தடவிய திரிச்சீலையை ஊசியால் நுழைத்தால் அத்துன்பம் இன்னும் எத்துணைப் பெரிதாம்! என்பதை எண்ணிப் பார்மின்கள்! ஆனால், யாம் அப்படியொன்றுஞ் செய்திலேம். மேற்றோலைக் கீறியவுடனே கந்தைத்துணியை வெந்நீரில் தோய்த்தெடுத்து எடுத்து அதனால் அக்கட்டியை நன்றாய் அதுக்கி அதுக்கி அதனுள் நிறைந்திருந்த சீழையுஞ் செந்நீரையும் வெளிவரச் செய்தேம். இவ்வாறு செய்கையில் எம்மனைவியார் அந்நோயாலும் அதனினின்று மீண்ட களைப்பாலுஞ் சிறிதுநேரம் உணர்விழந்து எம்மடிமீது விழுந்துவிட்டார். யாமோ அக்கட்டி

யிலுள்ள சீழையுஞ் செந்நீரையும் நன்றாய் வெளிப்படுத்துக் கழுவியபின் ஈரத்தைத் துடைத்துவிட்டு, ''இனி அச்சமில்லை வருக'' என்று எம் புதல்வியை அருகழைத்துக் கேழ்வரகு மாவைக் கிண்டிவரச்செய்தேம். இதற்குள் எம்மனைவியாருங் களைப்பு நீங்கிக் கண்விழித்து ''எனக்குவந்தபேரிடர் அப்பன் அருளால் நீங்கியது; உங்களுக்கு மிகுந்த வருத்தங் கொடுத்துவிட்டேன்'' என்று வணங்கினர். அது கண்டு எமதுள்ளம் ஆறுதல் அடைந்தது. கீறின கட்டியின்மேல் உடனே கேழ்வரகுமாவை முன்போலவே அடுத்தடுத்து வைத்துக் கட்டிவந்தேம். நீராவிபிடித்தல் முதலான முறைகளையும் ஒழுங்காகச் செய்வித்தேம். மறுநாளே சீழுஞ் செந்நீரும் இல்லாதொழிந்தன. புண்ணுங் காயத்துவங்கியது. அது காயத்துவங்கியது கண்டு கேழ்வரகுமாவை இறுகக் கிண்டிவைத்துக் கட்டிவர, மூன்றாம் நாளே புண்ணும் இல்லையாய் ஒழிந்தது. அதற்குப்பின் அவர்க்கு அந்தஇடத்தில் ஏதொரு நோயும் வந்ததில்லை. எல்லாரும் வெருக் கொண்ட அந்தக் கட்டியைக் கீறி மூன்று நாட்களில் ஆற்றிய எம்முடைய இயற்கை முறைகளை அறிந்தாரெல்லாம் மிக வியந்தனர்.

பின்னர்ப் பல ஆண்டுகள் கழித்து எம் மனைவியார்க்கு இரண்டுமுறை உள்ளங்காலில் வந்த மிகக்கொடிய புடைக்காளான் என்னுங் கட்டிகளையும் மேற் சொன்ன முறைகளின் படியே செய்து மூன்றுநாட்களில் ஆற்றிவிட்டேம். ஆனால், இதேபுடைக்காளன் என்னுங் கட்டி எமது இல்லத்திற்கு அடுத்த இல்லில் இருந்த ஓர் அம்மையார்க்கு வர, அவரைச்சேர்ந்தார் அதனை ஆங்கில மருத்துவரைக்கொண்டு பார்க்க, அவர் அதனைஅறுத்து ஆற்ற மூன்று திங்களுக்குமேல் ஆயின; அதுகாறும் அவ்வம்மையார் பட்ட துன்பம் அளவிடப்படா; ஏழைக் குடும்பத்தினரான அவர்க்கு அதனால் உண்டான பொருட்செலவும் மிகுதி.

இன்னும், எங் கடைசிப்புதல்வனுக்குச் சில ஆண்டுகட்கு முன் ஒரு பிட்டத்தில் ஒருகொடிய கட்டிவந்தது. அதனால்அவன் நடக்கவும் உட்காரவும் மாட்டானாய்க் குப்புறப் படுத்தபடியே பட்ட துன்பங் கணக்கிடப்படா. அவனுக்கும் மேற் சொன்ன முறைகளின்படியே செய்து மூன்று நாட்களில் அக்கட்டியை வேரறத் தொலைத்துவிட்டேம்.



இன்னும், இப்போது சில்நாட்களுக்கு முன் எம்பேரனுக்கு இங்ஙனமேவந்த ஒருபேரிடரை யாம்தீர்த்ததையும் இங்கே குறிக்கின்றாம். எருவாய்க்கும் ஆண்குறிக்கும் இடையே யுள்ள கீழ் இடத்தில் எம் பேரற்கு ஒருபெருங்கட்டிவந்தது. அதனை அறுத்துத் தீர்ப்ப தொழிய வேறு வழியில்லை யென்றும், ஆனாலும் அக்கட்டி மிகஇடைஞ்சலான இடத்திற் புறப்பட்டிருத்தலால் அதனை அறுப்பது மிக்க இடர்ப்பாடாவதுடன் அதனை அறுத்தலால் ஆள் உயிர்பிழைப்பதும் ஐயம் என்றும் ஆங்கிலமருத்துவ விடுதியிலுள்ளார் சொல்லி அவனை வீட்டுக்கே திருப்பிவிட்டனர். அவன் வேலைபார்த்த இடத்திலுள்ளார் அவனை எம்மிடஞ் செலுத்தினர். வந்தஅவனை யாம்ஏற்று, அக்கட்டியினைப் பார்க்க, முதலில் அஃது எமக்கும் அச்சத்தைவிளைத்தது. என்றாலும், எல்லாம்வல்ல இறைவனருளை நினைந்து, மேற்சொன்ன எம்முடைய முறைகளின்படி செய்து அதனைத்தீர்க்கத் துவங்கினேம். யாம் கத்தியாற் கீறவேண்டாமலே அக்கட்டி, நீரேற்றியினாலும் நீராவிவேதியினாலுங் கேழ்வரகுமாக் கட்டுகளாலும் நன்கு பழுத்துத் தானாகவே மூன்றாம் நாள் உடைந்தது. உடைந்த கட்டியினை வெந்நீரில் நனைத்த துணிகொண்டு அதுக்கி நன்றாகச் சீழையுஞ் செந்நீரையும் வெளிப்படுத்திவிட்டுப், பின்னும் அம்முறைப்படி செய்யவே, பின்னும் அஃது இரண்டுநாளில் ஆறிக் காய்ந்து போயிற்று. இதனைக் கண்டார்அனைவருந் துன்பமும்இடரும் இல்லாமற் காசுபணச்செலவு நேராமல் அத்தனை விரைவில் அக்கட்டியினை வேரறத் தீர்த்த எம்முடைய முறைகளின் விழுப்பத்தை வியந்து பாராட்டினர். இங்ஙனமே, இன்னுஞ் சிலர்க்கும் யாம் கட்டிகளை விரைவில் நீக்கிய வரலாறுகளும் உண்டு. அவை நிற்க.

இனித், தொற்றுநோயர்க வந்து மக்கள் பலப்பலரை ஆண்டுதோறும் உயிர்மாளச்செய்யும் அம்மைநோய் தீர்க்கும் முறைகளைச் சொல்லி அவ்வளவில் இவ்வத்தியாயத்தை முடிப்பாம். அம்மைநோய் என்பது வெப்புக்கொப்புளமேயன்றி வேறு ஏதும் அன்று. இது தொடர்பாக மழையில்லாதுபோன கடுங் கோடை காலத்திலேதான் வருகின்றது. கடுங் கோடைகாலத்திலும் இடையிடையே மழைபெய்து நிலங்குளிர்ந்து தூயநீர் உண்டாகுமானால் இந்நோய் உண்டாவதில்லை மழையின்றிவறண்டு நீரும் நிலனுங்

காற்றுங் கொதிப்பெடுத்திருக்குங் கடுங் கோடையிலேதான் இந்நோய் உண்டாதலைச் சிறிது ஆராய்ந்து பார்ப்பவர்க்கும், அம்மைநோய் என்பது கோடைக் கொப்புளமே யல்லாது பிறிது எதும் அன்றென்பது தெள்ளிதின் விளங்கும். ஆனாற், பகுத்தறிவு சிறிதும் இல்லாக் கீழ்மக்களோ, மாரியம்மனுக்குக் கிடாய் வெட்டிப் படையல் இடாமையினாலேதான் இந்நோய் வருகின்றதெனக் குருட்டுத்தனமாய் நம்பி, ஏழையுயிர்களை அப்பேய் அம்மனுக்குத் துடிக்கத் துடிக்க வெட்டிப் பலியிடுவதுடன், தாமும் அந்நோயால் உயிர்மாளுகின்றனர்! மாரியம்மனை நம்பிக் கும்பிடுபவர்களின் வீடுகளிலேயே ஆண்டுதோறும் பற்பலர் மாய்ந்து போதலைக் கண்டிருக்கின்றேம். ஏனென்றால், இந்நோய் தீரும் முறைகளைச் செய்தால் அம்மனுக்குச் சீற்றம் உண்டாகும்என்று பேதைமக்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு அது தீர்க்கும்முறை எதனையும் நோயாளிக்குச் செய்கின்றாரில்லை. நோயாளி கட்டிய துணியையும் அவிழ்ப்பதில்லை, அவன்படுத்த படுக்கையையுந் துப்புரவுசெய்வதில்லை. அவைமட்டுமோ! அம்மனைக் குளிரவைக்கின்றேம் என்று சொல்லிக்கொண்டு, நெருப்பு வீசுவதுபோற் காய்ச்சல்அடிக்கும் நோயாளிக்குக் கூழைப் பருகக்கொடுக்கின்றார்கள்! இளநீரைப் பருகக் கொடுக்கின்றார்கள்! கடுங்காய்ச்சலால் உடல் வறண்டு பசியின்றித் தீனிப்பை இயங்காமல் இருக்கையில் அங்ஙனங் கூழையும் இளநீரையும் அடுத்தடுத்துக் கொடுக்கவே, உடம்பின் அகத்துள்ள உறுப்புகள் பெரிதும்பழுதுபட, அதனாற் காய்ச்சல் இன்னும் மிகுதியாக, அதனால் உடம்பின் அகம் புறம் எங்கும் பெரிய பெரிய கொப்புளங்கள் உண்டாகி வெடித்துப் புண்ணாக, நோய் கொண்டவர் ஆற்றொணாப் பெருந்துன்பம் உழந்து சாகின்றனர்! சுற்றியுள்ள கீழ்மக்கள் தாம் அறிவில்லாமற் செய்த தீய முறைகளினாலேயே அவர் செத்தார் என்பதைச் சிறிதும் உணராமல், "மாரியாயிக்கு நாலுகடாவும் நாலுகோழியும் வெட்டாமல், இரண்டு கடாவும் இரண்டு கோழியும் வெட்டினதனால்தான் அம்மன் கோவங்கொண்டு உயிரைவாங்கினாள்!" என்று கூடிப்பேசி அழுது, மறுபடியும் அம்மாரிப் பேய்க்கு நான்குகடாவும் நான்குகோழியும் அறுக்கின்றார்கள்! மறுபடியும் அவரில் எவர்க்கேனும் வெப்புக்கொப்புளம் வந்து, இவர்கள் மறு



படியுஞ் செய்தபிசகான முறைகளால் உயிர் இழந்தால், இவர்கள் தாஞ்செய்பிழையினை உணராமல், "மாரியாயி நான்கு கடாவும் நான்கு கோழியும் பற்றாஎன்று சீறினாள். இனிமேல் ஆறுகடாவும் ஆறுகோழியும் வெட்டிப் பலியிடவேண்டும்!" என்று கூடிப் பேசியழுகின்றனர்! இங்ஙனமே தம் வாழ்நாள் எல்லாந் தாம்செய்பிழையினை ஒருசிறிதும் ஓர்ந்துபாராப் பேதைக் கீழ்மக்கள் வீணே ஏழையுயிர்களைவெட்டி வெட்டித் தொலைவில்லாப் பழிபாவங்களுக்கு ஆளாகி மாண்டுபோகின்றார்களே யல்லாமல், தம் அறிவால் ஆராய்ந்துபார்த்து, மாரிப்பேய் வணக்கத்தை யொழித்துத், திருத்தமான முறைகளைச்செய்து, அக்கோடைக் கொப்புளநோய் நீங்கி, நன்கு உயிர்வாழ்கின்றார்களில்லை! ஐயகோ! இப்பேதைமாக்களுக்கு நல்லறிவு உண்டாகும் நாள் எந்நாளோ! மேற்குலத்தவராகத் தம்மை யிறுமாந்து கருதிநடக்குஞ் சைவர்கள் பார்ப்பனராவது அப்பேதைகளுக்கு நல்லறிவு கூறி அவர்களை அப் பிழைவழியினின்று நீக்கி, நன்கு உயிர் வாழச் செய்கின்றனரோவென்றால் இல்லை! இல்லை! அதுமட்டுமோ! மேற் குலத்தவராகிய அவர்தாமும் மாரிப்பேய் வணக்கத்தைச்செய்து, அதற்கு ஆடு கோழி வெட்டுவித்து, அக்கயவர்களைப் போலவே தாமுந் துன்புற்றுச் சாகின்றார்கள்! இனிமேலாயினும் இவர்களும் பிறருந் தீதான பிழையான முறையைக் கைப்பற்றாதொழித்து, யாங் கூறும் நல்ல திருத்தமான முறையைக் கடைப்பிடித்து ஒழுகி இனிது உயிர்வாழ்வார்களாக!

அற்றேல், இவ்வாறு கடுவேனிற் காலத்தில் வரும் அம்மையென்னுங் கடுங்காய்ச்சற் கொப்புளநோயை வாராமற் றடைசெய்து கொள்ளல் யாங்ஙனமெனிற், கூறுதும். வெயிலின்கடுமை மிகுந்துள்ளகாலத்தில் எல்லாருங் குளிர்ந்தநீரிற் காலையிலாயினும் உச்சிப் பகலிலாயினும் நாடோறுந் தலைமுழுகி வரல்வேண்டும். தலைமுழுகிய பின் தோய்த்துலர்ந்த ஆடைகளையே உடுத்தல்வேண்டும். தம்மை நாகரிகமுடையவராகக் கருதி வெளிமினுக்குச் செய்யும் ஆண் பெண் பாலாரிற் பலர் தாம் குளிக்கப் போம் போதுந் தலைமுழுகப் போம்போதுந் தாம் முன்னாளிற் கட்டியிருந்த ஆடையை அவிழ்த்து வைத்துவிட்டு, நீராடியபின் மீண்டும் அதனையே எடுத்து உடுத்திக் கொள்ளுகின்றனர். இப்படிச் செய்வதுதான்

"குளிக்கப்போய்ச் சேறாடிக்கொள்வது" ஆகும். ஒருநாட்கட்டியிருந்த துணிகளில் வியர்வைத் துளைவழியாயும் மலவாயில்கள் வழியாயும் உடம்பிலிருந்து வெளிவந்து படிந்துள்ள அழுக்கிற் கணக்கில்லாத நச்சுப்புழுக்கள் நிறைந்திருக்கும். இவை நம் ஊனவிழிகளுக்குப் புலப்படாத அத்துணைச் சிறியவாய் இருப்பினும், மேனாட்டவர் செய்துவைத்திருக்கும் பெருக்கக் கண்ணாடியைக் கொண்டு நோக்குவார்க்கு அவை அத்துணியில் ஒட்டியிருத்தல் நன்கு புலனாம். ஆதலால், உடம்பைக் கழுவித் துப்புரவு செய்தற்குமுன், ஆடையைக் கழுவித் துப்புரவு செய்துவைத்தல் கட்டாயமானது; நீராடியவுடனே தூய அவ்வுடையினையே உடுத்தல்வேண்டும். இவ்வாறு செய்யாமற், குளித்துத் தலைமுழுகிய பின் முன்கட்டியிருந்த அழுக்குத்துணியையே உடுத்தால், அதன்கண்ணுள்ள நச்சுப்புழுக்கள், நீராடிய உடம்பில் நன்றாய்த் திறந்திருக்கும் வியர்வைத் துளைகளின்வழியே உட்புகுந்து, செந்நீரிற் கலந்து பற்பல நோய்களை வருவிக்கும். நன்றாய்க்குளித்து முழுகித் தூய ஆடைகளை உடுத்துஞ் சைவர் பார்ப்பனர்க்குப் பெரும்பாலும் வராத அம்மைநோய், அவர்போற் றூயராய் நடவாத கீழ்மக்களுக்கே மிகுதியாய்வருவது இக்காரணம் பற்றியேதான்; ஆதலால், நீராடியபின் தூய உடைகளையே மேற்கொள்க.

அதுவேயுமன்றி, இருக்கும் இடங்களில் அழுக்குங் குப்பையுஞ் சேராமல் நாடோறும் அவற்றை அப்புறப்படுத்தி, அவற்றைத் தீயிலிட்டுக் கொளுத்திவிடல் வேண்டும். தாம் படுக்கும் பாய்களையும் மெத்தைகளையும் அடிக்கடுத்துத் துப்புரவு செய்து வெயிலிற் காயவைத்தல்வேண்டும். தம் இல்லத்தின் உள்ளே ஒவ்வொரு பகுதியிலும் வெயில் வெளிச்சமுங் காற்றுஞ் செவ்வையாய் உலவும்படி செய்தலும் இன்றியமையாதது.

இனிக், குடிநீர் தூயகிணறுகள் ஏரிகள் குளங்களினின்றும் எடுக்கப்பட்டு மட்பாண்டங்களில் வைக்கப்பட்டால் தூயதாய்ச் சில்லென்று இருக்கும். அந்நீரில் விலாமிச்சைவேர் அல்லது சந்தனக்கட்டை இட்டுவைத்தால் உடம்புக்குமிக்க நலந்தரும் மணம் உடையதாகும். மலங்கழிக்கும் இடங்கள் சாக்கடைகள் முதலியவற்றின் அருகிலுள்ள கிணற்றுநீர் குளநீர் பெருந்தீங்குதரும். அங்ஙனமே மக்கள்பலர் படிந்து கெடுக்கும் ஆற்றுநீர் குளநீர் முதலி-



யனவும் பருகுதற்கு ஆகா. இவ்வருவருப்பான நீரைத்தவிர வேறு தூயநீர் கிடையாத ஊர்களில் உள்ளவர்கள், அந்நீரை நன்றாக வடிக்கட்டித் தேற்றாவிதைகொண்டு தெளிவித்து, அடுப்பிலேற்றிக் கொதிக்கவைத்து ஆற்றிப் பருகுதலே செயற்பாலார். முதன்மையாய் அம்மை, கசப்பு, நச்சுக்காய்ச்சல் பரவியுள்ள ஊர்களில் உறைபவர்கள், நன்றாய் வடிக்கட்டித் தெளிவித்துக் கொதிக்கவைத்து ஆற்றிய நீரையன்றி, வேறெதனையும் பருகாமற் கருத்தாயிருத்தல் வேண்டும்.

இதனையடுத்துத், தாம் உண்ணும் உணவுகளிற் குழம்பு, மிளகுநீர், கறி முதலியவற்றிற்குப் பச்சைமிளகாய், மிளகாய், கடுகு முதலான காரப்பொருள்களைச் சேராமல் அறக் குறைத்து விடுக. கடுங்கோடைகாலத்தில் இவற்றைச் சேர்ப்பவர்க்கு அம்மை, வயிற்றுளைச்சல், சொறி சிரங்கு முதலியநோய்கள் வரும். ஆவின்மோரில் எலுமிச்சம்பழச்சாறு கலந்து, அதனைச் சோற்றுடன் கலந்துண்டலும், அறைக்கீரை, சிறுகீரை, முளைக்கீரை, பீர்க்கங்காய், சாம்பற் பூசனிக்காய், வாழைக்காய், உருளைக்கிழங்கு முதலியவைகளில் ஏதேனும் ஒன்றைக் கறியாக உடன்சேர்த்து உட்கொள்ளுதலுமே கோடை காலத்திற்கேற்ற உணவாமென்று உணர்ந்து கொள்க. காப்பி, தேயிலை, கோக்கோநீரை அறவே ஒழித்து விட்டுக், கொத்தமல்லிவிதை நன்னாரிவேர் ஏலக்காய் ஒருங்குசேர்த்திடித்த தூள் இட்டுக் காய்ச்சிய நீரை ஆவின்பாலும் பனைவெல்லமுங் கலந்து அருந்துக.

இன்னும், அம்மை முதலான கொடிய தொற்றுநோய்கள் ஊரிற் பரவியிருக்குங்காறும் அவ்வூரிலுள்ள ஆண் பெண்பாலார் ஒருவரையொருவர் மருவுதல் ஆகாது. ஏனென்றால், உடம்பிலுள்ள வித்துநீர் மிக்க ஆற்றலுடையது. புதிய ஓர் உயிருக்கு அருமையானதோர் உடம்பை உண்டாக்கித் தரத்தக்க அத்துணைப் பேராற்றல் உடைய அதன் சிறப்பை என்னென்றுரைப்பேம்! இஃது உடம்பில் இருக்குங்காறும், எத்தகைய நோய்ப்புழு உடம்பினுள் நுழைந்தாலும் அஃது அங்கேஇருக்க இடம் பெறாமல் வெளியே துரத்தப்படும். மற்று, வித்துநீர் ஒழுகிப்போன உடம்பிலோ அஃது எளிதாக நுழைந்து, அகம்புறமுள்ள உறுப்புகளையுஞ் சீரழித்து உயிரையுந்தொலைக்கும். ஆதலால், தொற்று-

நோய் உள்ள காலங்களில் ஆண் பெண்பாலார் மருவித் தம் உடம்பிலுள்ள சாற்றைக் கழியவிடா திருப்பாராக!

இன்னும், இத் தொற்றுநோய்களால் துன்புறுவோர் தமக்கு எவ்வளவு சிறந்த நண்பராயிருப்பினுந், தமக்கு எவ்வளவு நெருங்கிய உறவினராயிருப்பினும், அவர்க்கு அந்நோய்தீரும் வகையில் உதவிகள் செய்யலாமேயொழிய, அவர் அருகிருந்து உண்ணுதலும் அவர் பக்கத்தே கிடந்துறங்குதலும் ஆகா. அவர்க்கு உதவி செய்வோர் குளித்து முழுகி இருவேளை தூயஆடை யுடுத்து, மலநீர்க்குடர்களைத் துப்புரவாய்வைத்து, முன்னே குறிப்பிட்டிருக்கும் உணவுப்பண்டங்களை அரைவயிற்றுக்குச் சாப்பிட்டுத், தமதுடம்பின் நலத்தை மிகவுங் கருத்தாய்ப் பேணல் வேண்டும். அவருந் தாமும் உறையும் இல்லங்களில் அகில், சந்தனம், சாம்பிராணி முதலான அரிய மணப்பொருள்களை அடிக்கடி புகைத்தல் வேண்டும். என்றிவ்வளவுங் கருத்தாய்ச்செய்து வருவார்க்கு அம்மை முதலான எத்தகைய தொற்றுநோயும் வராது.

அஃதொக்கும், எப்படியோ பிசகி நடந்து அம்மைநோய் கொண்டு துன்புறுவார்க்கு அந்நோய் தீர்க்கும் முறைகளை அறிவுறுத்துகவெனிற்; கூறுதும். அம்மைநோயாற் பற்றப்பட்டார்க்கு அது தீருமட்டும் நாடோறும் நீரேற்றிகொண்டு மலக்குடரைத் துப்புரவு செய்க; காய்ச்சி ஆறியநீரே அம்மைநோய் கொண்டார்தா நீரேற்றிக்குப் பயன்படுத்தல் வேண்டும். வயிற்றுக்கு ஏதொரு வலியவுணவுங்கொடாமல், ஆவின்பாலில் வாற்கோதுமை மாவிட்டுக்காய்ச்சிய கஞ்சிநீரைமட்டும் ஒருநாளில் இரண்டு அல்லது மூன்றுவேளை பருகக்கொடுக்க. அம்மைநோய் கொண்டார்க்குப், பாலும், பால்சேர்த்தது எதுவும் உள்ளுக்குக் கொடுக்கலாகாது என்று அறிவில்லாப் பேதைமக்கள் நுவல்கின்றனர். அம்மைநோய் கொண்ட எம் சிறார்க்கு ஆவின்பாலும் வாற்கோதுமை மாவுங் கலந்த கஞ்சியே பருகக்கொடுத்து அந்நோயை எளிதில்தீர்த்திருக்கின்றேம். ஆகையால், அத்தகைய பாற்கஞ்சியுணவு கொடுத்தலால் ஏதுந் தீங்குவாராது நன்மையே வருமென்று கடைப்பிடித்துணர்ந்து கொள்க.

இவ்வளவோடு இருந்துவிடாமல் மற்றொன்றுங் கட்டாயமாகச் செயற்பாலதுளது. அம்மைநோயில் இரண்டுவகை யுண்டு; அவை: கடுங்காய்ச்சல் வீசி மிளகளவுக்குமேற் பெருங் கொப்புளங்களை உடம்பெங்குந் தோற்றுவித்து நிறைத்து, அக்கொப்புளங்கள் உடைந்தபின் உடம்பை முழுதும் பழுது படுத்துவதாகிய பேரம்மையும், அவ்வாறின்றிக் கடுகளவு குருக்களைத் தோற்றுவித்து விரைவிற் றீர்ந்து போகுஞ் சின்னம்மையும் என்பனவாகும். இவையேயன்றி, உடம்பிற் காணப்படுங் குருக்களின் பருமனுக்குத்தக்கபடி பயறம்மை முதலிய பலபெயர்களால் வழங்கப்படுவனவும் பலஉள. பேரம்மையல்லாத மற்றைய வெல்லாம், நீரேற்றிவைத்து மலக்குடரைக் கழுவுதலாலுங், கோதுமைமாக் கலந்த ஆவின்பாற்கஞ்சி கொடுத்தாலுமே எளிதிற் றீர்ந்துபோகும். மற்றுப், பேரம்மைபோ அங்ஙனம் எளிதிற் றீர்வதன்று; மேலும், அதனால் உடம்பில் எழுங்கொப்புளங்கள் உடைந்து புண்ணாகி எத்தகைய பேரழகுவாய்ந்த உடம்பையும் பழுதாக்கிவிடும். ஆதலால், இதனால் வருங் கொப்புளங்கள் உடையாமலே இது விரைவிற் றீர்ந்து போதற்குரிய மற்றொரு சிறந்த முறையினையும் மனத்திட்பத்தொடுசெய்தல் இன்றியமையாதது.

அம்முறை என்னையெனிற் கூறுதும். கொப்பூழின் கீழ் உள்ள அடிவயிற்றின் மூலத்தில் உண்டாகும் பெருங் கொதிப்பினாலேயே அம்மை முதலான கொடிய நோய்கள் வருகின்றன. ஆகையால், அத்தகைய பெருங் கொதிப்பினை அடக்கி அடிவயிற்றைக் குளிரச் செய்வதாகிய சிறந்த எளிய முறையினைக் கடைப்பிடியாய்ச் செய்துவரின் அம்மைமுதலான அந்நோய்கள் ஏதோர் இடையூறும் பயவாமல் எளிதில் நீங்குதல் திண்ணம். அடிவயிற்றைக் குளிரச் செய்தற்குக், குளிர்ந்த நீரை ஒரு துத்தநாகத் தகட்டுத் தொட்டியில் விட்டு அதில் உட்காரும் முறையினை ௪௧௧-ஆம் பக்கத்திற் காட்டியிருக்கின்றோம். அதன்படி காலை நண்பகல் மாலை என்னும் மூன்று பொழுதுகளுங் குளிர்ந்தநீரில் உட்கார்ந்துவரின், மறுநாளே அம்மைக் காய்ச்சல் குறையத்துவங்கும். இரண்டாம் நாள் மூன்றும் நாட்களிலும் அங்ஙனமே உட்காரிற், காய்ச்சல் முழுதும் நின்றுபோவதுடன் மேலெழுந்த கொப்புளங்களுஞ் சுவடறமறைந்து போகும். இவ்வாறுசெய்து, எமக்கு முன்னொருகால் வந்த இக்கொடியநோய் தீர்ந்துபோன வரலாற்றினை இங்கே எடுத்துரைப்பாம்.

இற்றைக்குப் பத்தொன்பதாண்டுகட்கு முன் யாம் வடநாடு சென்று அங்குள்ளார்க்குச் சைவசித்தாந்த உண்மைகளை விரிவுரைகள்வாயிலாக எடுத்துச்சொல்லல் நேர்ந்தது. அங்கே கற்கத்தாவிலிருந்து இமயமலைமேல் தார்ஜலிங்கத்திற்கும், பின்னர் அங்கிருந்து கீழிறங்கிக் காசிக்கும், அங்கிருந்து அரத்துவாரத்திற்கும், அங்கிருந்து மறுபடியும் இமயமலையடிவாரத்துள்ள துரோணாசிரமத்திற்கும், அங்கிருந்து தில்லி ஆக்ரா வம்பாய் முதலான நகரங்களுக்கும், பிறகு சிக்கந்தராபாக்கம் ஐதராப்பாக்கங்களுக்குஞ் சென்று பின்னர்ப் பல்லாவரந் திரும்பினேம். யாம் வடக்கே சென்றது கடுவேனிற்காலம்; வடநாடுகளில் வெயிலின் வெப்பம் மிகக்கடியது. யாம் திரும்பி ஊர்வந்து சேர ஆறு திங்கள் கழிந்தன. கடுங்கோடையில் ஆறு திங்கள் சுற்றி விரிவுரைகள் செய்து வந்தமையால் உண்டான சூடு எமதுடம்பில் மிகக்கொடிய அம்மைக் காய்ச்சலாய் வெளிப்பட்டது. இக்காய்ச்சலுண்டாகிய இரண்டாம்நாள் எமது மேனியெங்கும் மிளகளவினவான வெள்ளைக் கொப்புளங்கள் நிறைந்தன. உடம்பின் புறத்தேமட்டுமன்றி அகத்தேயுங் கொப்புளங்கள்; இருகண்களினுள்ளும் வாயினுள்ளுங் காதுகளினுள்ளும் எருவாயினுள்ளுங் கொப்புளங்கள். எமதுடம்பினின்று வீசிய காய்ச்சலின்வெப்பமோ எமக்குஅருகு வருவாராலுந் தாங்குதற்கு இயலாததாயிருந்ததென்றால், அஃது எம்மை எவ்வளவு வாட்டி வதக்கியிருக்குமென்பதை உணர்ந்து பார்மின்கள்!

இவ்வாறு யாம் துன்புறம் நிலையிலிருக்கையில் எம்மைப் பார்க்கவந்த அண்டை அயலார்களெல்லாரும் யாம் கட்டிலிற் பஞ்சுமெத்தைமேற் படுக்கலாகாது என்றனர்; கீழே பாய்விரித்து அதன்மேற்றான் படுக்கவேண்டுமென்றனர் மற்றும்பலர்; நோய் தீரும் மட்டும் படுக்கைத்துணிகளையும் யாம் கட்டியிருந்த துணிகளையுங் களையலாகாது என்றனர் வேறுபலர்; மாரியாயிக்கு மாவிடித்துக் கும்பம்வைத்து வணங்கிக் கூழும் இளநீரும் யாம் உட்கொள்ள வேண்டுமென்றனர் இன்னும்பலர்; வாழையிலையை விரித்துவைத்து அதன்மேல் எம்மைப் படுக்கவைக்க வேண்டுமென்றனர் மற்றைப்பலர்; வேப்பிலையை உடம்பெங்கும் அணிந்து மஞ்சள்துணி கட்டவேண்டுமென்றனர் பின்னும்பலர்; மாரியாயி



கண்கொண்டு பார்க்க முடியாமல் இவர்மேல் விளையாடுகிறாள் என்றனர் மேலுஞ்சிலர்; மாரியாத்தாள் பூட்டியிருக்கும் இத்தனை முத்துக்களும் உடைந்தால் இவர் எப்படிப்பிழைப்பாரோ என்று வருந்தினர் மற்றும்பலர்.

இவ்வாறாகப், பார்க்கவந்த பேதைமக்கள் கூறிய மொழிகளைக்கேட்டு இன்னது செய்வதென்றறியாமல் எம்மவர் மிகக்கலங்கினர். யாமோ, இனிப் புறத்தார் எவரும் இந்நிலையில் எம்மை வந்து காணலாகாதென்று உறுதியாகத் திட்டஞ் செய்துவிட்டு, எம்முடைய முறைகளைச் செய்யத்துவங்கினேம். யாம் படுக்கும் மெத்தையின் உறை தலையணையுறைகளை நாடோறும் மாற்றித் துவைத்துலர்ந்த உறைகளையே அவற்றிற்கு இடுவித்தேம். அங்ஙனமே யாம் கட்டியிருந்த உடைகளையும் இரண்டுவேளை களைந்து தூயன உடுத்திக்கொண்டேம். வீடெங்கும் நறுமணம் வாய்ந்த சாம்பிராணி புகைப்பித்தேம். எல்லாம்வல்ல இறைவனையும் இறைவியையுந் தமிழ்மறையாகிய தேவாரம் ஓதி நறுமலர்கொண்டு ஒருநாளிற் பலமுறை வழிபாடு ஆற்றும்படி செய்வித்தேம். இவற்றொடு, காலைமாலை நீரேற்றிக்கொண்டு மலக்குடரைத் துப்புரவு செய்தலும், ஒருதுத்தநாகத் தகட்டுத்தொட்டியில் விட்ட குளிர்ந்த நீரிற் காலை நண்பகல் மாலை என்னும் முப்பொழுதுகளும் முறைப்படி அரைமணிநேரமிருத்தலும், ஆவின்பாலில் வாற்கோதுமை மாவிட்டுக்காய்ச்சிய கஞ்சியைப் பசியெடுத்த போதுமட்டுஞ் சிறிதாய்ப் பருகுதலும் ஒழுங்காகச் செய்து வந்தேம். இங்ஙனஞ் செய்த இரண்டாம்நாளே காய்ச்சலின் கடுமை தணிந்தது; மூன்றாம்நாட் காய்ச்சலும் ஒழிந்தது, அதனோடு அம்மைக் கொப்புளங்களும் முற்றும் மறைந்துபோயின. எமதுடம்பின்கண் அம்மைக் கொப்புளம் வந்த வடு ஒருசிறிதுமேயில்லை. இவ்வாறு செய்யாமல், அறிவில்லாப் பேதைமக்கள் தலைக்குத் தலை சொன்னபடியெல்லாம் நடந்திருந்தேமாயின், யாம் அக்கொடிய நோய்க்குத் தப்பிப் பிழைத்தல் அரிதாய்ப் போயிருக்கும்; தப்பிப் பிழைத்தாலும் அக் கொப்புளங்களால் உண்டான தழும்புகள் எமது அழகிய மேனியை அருவருப்பாக்கியிருக்கும். அங்ஙனம் ஆகாமல், அந்நேரத்தில் எமக்கு நல்லறிவையும் மனத்திட்பத்தையுங் கொடுத்து, எம்முடைய எளிய இயற்கை முறைகளினாலேயே அக்

கொடுநோயை மூன்றுநாட்களிற் சுவடறத் தீர்த்துக் கொள்ளு மாறு அருள் செய்த எம் ஆண்டவனை எங்ஙனம் வழுத்துவேம்! எவ்வாறவற்கு நன்றிசெலுத்துவேம்! அத்துணை விரைவில் யாம் அக்கொடுநோய் தீர்ந்து திகழ்ந்ததை மறுபடியும் வந்துகண்ட அண்டை அயலவர் இறும்பூதுற்றனரேயன்றி, எம்முடைய முறை களைத் தாமுஞ்செய்து தமக்கும்அந்நாளில் வந்த அக்கொடுநோயி னைத் தீர்த்துக் கொள்ளாமல் மாரியாயியைக் கும்பிடுந் தீய முறை களையேசெய்து அவர்களிற் பலர் பெருந்துன்பத்தில் உழன்று உயி ரிழந்தார்கள்! அறிவு சிறிதுமில்லாப் பேதைமக்கள் சிறிதுந்திருந் தாராயினும், அறிவுடைய நன்மக்களாவது எம்முடைய முறை களைக் கடைப்பிடியாய்க் கொண்டு ஒழுகி நீடு இனிது வாழ்வார் களாக!

இதுகாறும் நன்கு விளக்கிப்போந்த இயற்கை முறைகளை உறுதியாய்ப்பிடித்து அவற்றின்படி வழுவாமல்நடந்து வாழ்க்கை செலுத்தி வருவார்க்கு எத்தகைய நோயும் வராது. ஏதோ பிசகி நடந்ததால் ஒரோவொருகால் நோய்வரினும், அந்நோய்களைத் தீர்த்துக் கொள்ளுதற்கு மேலே காட்டியிருக்கும் முறைகளைக் கடைப்பிடித்து நடந்தால், ஏதொரு செலவுமின்றி, மருத்துவ ருதவியின்றி அவை எளிதிலே தீர்ந்துபோகும்.

எந்தநோய் வந்தாலும் உடனே மருத்துவரை வருவித்தலும், அவர்தரும் அல்லது குறித்துக் கொடுக்கும் மருந்துகளை விழுங் குதலும் மேலும் மேலும் நோயினை வளர்ப்பதற்கே வழியாகும். நோய்வரும் அடையாளங் கண்டவுடனாவது, அன்றி நோய்வந்த பின்னாவது காலந்தாழாது விரைந்து செயற்பாலது நீரேற்றி கொண்டு மலக்குடரைக் கழுவி விடுதலேயாம். இங்ஙனம் மலக் குடரைக் கழுவி விட்டதும் நோயின்கடுமை அரைவாசிக்கு மேல் தணிந்து போகுமாதலால், வந்தநோய்க்குச் சிறிதும் அஞ்சவேண் டுவதில்லை. நோய்வந்த மறுநாட்காலையிற் கடுக்காய்ச்சாறு அருந் தினால் மேற்குடர் கீழ்க்குடர் இரண்டுந் துப்புரவாதலோடு உடம் பிலுள்ள நச்சுநீர்களும் வெளிப்பட்டுவிடும். இதனையடுத்துச் செய் தற்குரியது, கொடியநோயா யிருந்தால் முழுப்பட்டினி கிடத்த லும், எளிய நோயாயிருந்தால் இரண்டுவேளை ஆவின் பாற் கோதுமைக்கஞ்சி செரிக்குமளவாய்ச் சிறுக அருந்துதலும் ஆகும்.



இவற்றிற்கு மேலும், நீராவி வேதுபிடித்தலுங் குளிர்ந்த நீரி லிருந்து மூலத்தைக் குளிரவைத்தலும் வேண்டிய நோய்களா யிருந்தால், முன்னே சொல்லியிருக்கும் அம்முறைகளைக் கருத் தாய்க்கொண்டு செய்தல் வேண்டும். இவற்றிற்குமேலும் மருந்து வேண்டிய நோய்களாயிருந்தால், யாம் அவ்வந் நோய்களுக்குக் குறித்திருக்கும் மருந்துகளை வாங்கி யுட்கொள்ளல் வேண்டும். இவற்றிற்குமேலும், மருத்துவர் நேரேவந்து பார்த்து மருந்தூட்ட வேண்டிய நோய்களாய் இருந்தால் மட்டும் வல்ல மருத்துவர்களை வருவித்துப்பார்த்தல்வேண்டும். என்றாலும், யாங்கூறிய இயற்கை முறைகளை வழுவாது கைக்கொண்டு நடக்கும் மனத்திட்பம் உடையார்க்கு, மருத்துவரை வருவிக்குங் கட்டாயமே நேரா தென்று திண்ணமாய் உணர்ந்துகொள்க.

இனி, மருத்துவர்களே தம்முடைய மருந்துகளில் நம் பிக்கை யில்லாதவர்களாய் இருக்கின்றார்கள்; தமக்கு நோய் வந் தால் தம்முடைய மருந்துகளை உட்கொள்ளாமல், இயற்கை முறை களைச்செய்தே அந்நோயைத் தீர்த்துக்கொள்ளுகின்றார்கள். தமிழ் ஆயுர்வேத, யூநாநி, ஆங்கில மருத்துவங்களிற் கைதேர்ந்த மருத் துவர்களிற் பலரும், மருந்துண்டலால் உடம்பிலுள்ள இரத்தம் நஞ்சாய்ப் போகின்றதே யொழியப் பயன் ஒன்றுமில்லை யென்று நுவல்கின்றனர். அவர்களுடைய கருத்து இடையறாது மருந்து உண்டு இரத்தத்தை நஞ்சாக்கிக் கொள்வாரைப் பற்றியதேயாகும். கற்கத்தா 'நாகேந்திர நாத சென்' என்னும் வல்ல மருத்துவ ஆசி ரியரின் மருந்துகள் நோயாளிகட்கு நலந்தருவதல்லால் தீது பயக் கக் கண்டிலமாகலின், அத்தகைய பெரியாரின் மருந்துகளுஞ் செந்நீரை நஞ்சாக்குமென்று கொள்வது கூடாது. என்றாலும், "அளவுக்குமிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சாம்" என்னும் பழ மொழிப்படி உயர்ந்த மருந்துகளையும் அடுத்தடுத்து உட்கொள லாகாதென்பதே அறிஞர் எல்லார்க்கும் ஒத்தமுடிபாகும். ஒவ் வொருவருந் தம்மாற் கூடியமட்டும் முயன்று இயற்கை முறை களிற் பழகி, மருந்தைக் கையில் எடாதுவிடுதலே செயற்பாலதா மென்க.



210468

# இருபத்து மூன்றாம் அத்தியாயம்

## மனநிலையும் நீண்ட வாழ்க்கையும்

இனி, நோய் இல்லாமலும் வந்தநோயை விரைவிற் றீர்த்தும் வாழும் ஆண் பெண் பாலாருந் தமது மனநிலையை எவ்வளவுக்கு நலமுடையதாக வைத்து ஒழுகுகின்றார்களோ அவ்வளவுக்கு அவர்கள் நீண்டகாலம் மூவாயாக்கையினராய் நன்கு உயிர்வாழ்வர். மனநலன் இல்லாதவர்களோ அவ்வாறு நீண்டகாலம் உயிரோடிருத்தல் இயலாது. மேலே, பத்தொன்பதாம் அத்தியாயத்தில் "தாயின் மனநிலையுங் கருவின் அமைப்பும்" என்னும் அரிய பொருளைப்பற்றிப் பேசியவழி, ஒருவரது உடம்பின் நலந்திங்குக்கு அவரது மனநிலை எத்துணை இன்றியமையாத காரணமாயிருக்கின்றதென்பதூஉம், ஒருதாயின் மனநிலையின் தன்மைக்கு ஏற்பவே அவள் வயிற்றில் உருவாகுங் கரு அழகுடையதாகவோ அழகிலதாகவோ நல்லியல்புடையதாகவோ தீயியல்புடையதாகவோ இனிய அறிவுடையதாகவோ இன்னாஅறிவுடையதாகவோ பிறந்து தனக்கும் பிறர்க்கும் நன்மை தீமைகளைப் பயவாநிற்கின்றதென்பதூஉம் பல எடுத்துக்காட்டுகளால் நன்கு விளக்கிப் போந்தாம். அவ்வத்தியாயப் பொருளைக் கருத்தூன்றிப் பார்ப்பவர்களுக்கு மனநலன் நீண்டவாழ்க்கைக்கு எத்துணை நெருங்கிய தொடர்புடையதாய் உளதென்பது விளங்காமற் போகாது. என்றாலும், மனநிலைக்கும் உடல் நிலைக்கும் உள்ள பிரிவில்லாப் பெருந்தொடர்பினை மீண்டும் எடுத்துப் பேசுவது இன்றியமையாததாயிருத்தலின், இவ்வத்தியாயத்தில் இயன்றமட்டும் அதனை விரித்துப்பேசி அவ்வளவில் இந்நூலை நிறைவு செய்வாம்.

முதலில் உடம்பின் இயக்கத்திற்கு உள்ளத்தின் இயக்கமே காரணமாயிருத்தல் அறியற்பாற்று. உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத மூச்சுஓட்டம் உறக்கத்தில் இருந்தும், அப்போது உடம்பு உணர்வுடையதாய் இயங்காமல் உணர்வில்லாக் கட்டை போலவுங் கற்போலவும் இருத்தல், என்னை? உடம்பும் உடம்பிலுள்ள எல்லாக் கருவிகளும் ஏதொரு பழுதுமின்றிச் செவ்வனே அமையப்பெற்றிருந்தும், அவை அத்துணையும் ஒருசிறிதும் இயங்காமல் ஒருவர் உறக்கத்தில் அமிழ்ந்திக்கிடத்தல் என்னை? உயிர் இருந்தும், அவ்வுயிர் உலவுதற்கு இடமான உடம்பு அதனோடு



ஒருங்கிருந்தும் அவையிரண்டுந் தொடர்பில்லாதனபோல் அங்ஙனம் ஆழ்ந்து துயிலிற்கிடத்தல் என்னை? என்று ஆராய்ந்து பார்க்கவல்லார்க்கு, விழிப்பிற்போல உறக்கத்திலும் அவையிரண்டும் ஒன்றுசேர்ந்திருந்தாலும், அவைதம்மை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி இயக்குங் கருவியாகிய மனம் என்பதொன்று உறக்கத்தில் தான் இயங்காமல் அமைந்து கிடத்தலால், உடம்பும் உயிருமாகிய அவையிரண்டுமே அங்ஙனம் இயக்கமின்றிக் கிடப்பவாயினவென்னும் உண்மை விளங்காநிற்கும்.

இனி, உறக்கத்தின் மட்டுமேயன்றி ஒருவர் விழித்திருக்கையிலும், அவர்தம் பொறி புலன்கள் நடைபெறுதற்கும் அவற்றின் வழியே உயிர் உணர்வுடையதாய் இயங்குதற்கும் அவ்விரண்டனையும் ஒன்றோடொன்று இசைக்கும் உள்ளமே முதற்பெருங்கருவியாய்த் திகழ்கின்றது. மழைபெய்துவிட்ட நீலவானத்தில் முழுநிலாவிளங்கும் அழகியகாட்சியினைக் காணும் இருவரில் ஒருவர் அதனைக்கண்டு மகிழ்தலும், மற்றொருவர் அதனைக் காணினும் அதன் அழகினை வியத்தல் செய்யாராய்த் துயர் கூர்ந்திருத்தலும் என்னை? ஒருவர் இன்பத்தால்உந்தப்பட்டுக் கட்புலன் வழிச்செல்லும் மனவுணர்வினால் அவ்வழகிய காட்சியினைக்கண்டு மகிழ்கின்றாரென்பதும், மற்றொருவர் துன்பத்தால் ஈர்க்கப்பட்டுக் கண்வழிச்செல்லா மனவுணர்வின்கண் மடிந்திருத்தலால் அதனைக்கண்டு மகிழாதுபோயினரென்பதும் அறிகின்றனம் அல்லமோ? இனிய சுவையுடைய உணவுகளை மிசையுங்காலத்து ஒருவரோடொருவர் உரையாடுதல் ஆகாது என்று அறிவுடையார் கூறுதல் ஏன்? பேசும்பொருளில் மனம் இழுப்புண்டு உணவின் சுவையை அறியாதென்பது பற்றியேயன்றோ? நோய்கொண்டார் ஒருவர் அந்நோய்த் துன்பத்திலேயே தமது மனத்தைச் செலுத்தச் செலுத்த அந்நோய் மிகுதிப்படுதலும், அதனை நினையாது இனிய இசைகளைக் கேட்டலிலுஞ் சிறந்த நாடகக் காட்சிகளைக் காண்பதிலுங் கவர்ச்சிமிக்க கதைகளைப் பயில்வதிலுங் கருத்தை அவர் ஈடுபடுத்தப் படுத்த அந்நோய்த் துன்பம் விலகி நலம் உண்டாதலும் என்? மனவுணர்வு அவ்வவற்றைப் பற்றுதலால் அன்றோ? நோய்த்துன்பத்தில் உணர்வு செல்லுங்கால் நோய் மிகுந்து தோன்றுகின்றது; அஃது அதனைவிட்டுப் பொறிவழிச்

சென்று இனிய நிகழ்ச்சிகளைப் பற்றுங்கால் நோய்த் துன்பம் மறைந்துபோக இன்பநுகர்ச்சி முனைந்துநிற்கின்றது. எனவே, நாம் விழித்து எல்லா நினைவுகளோடு இயக்குங்காலத்தும், மனவுணர்வு, மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளையும் பற்றிநின்று புறத்தேயுள்ள பொருள்களை யுணருந்தோறும் நமக்குப் புறப்பொருளறிவே நிகழாநிற்குமென்றும், மற்று அஃது அவ்வைம்பொறிகளைப் பற்றாது அகத்தே திரும்பித் தான் முன் நாட்களில் துய்த்த இன்பதுன்பங்களையும் அவற்றிற்கேதுவான பொருள்களையும் மாறி மாறி நினைந்து அவற்றைப் பற்றிநிற்குந்தோறும் புறப்பொருளறிவு மறைந்துபோக அகப்பொருளறிவே நம்மாட்டுக் காணப்படுமென்றும் உணர்ந்துகொள்ளல் வேண்டும். இன்னும், உறக்கத்தில் மனஓட்டம் அடங்கிப் போதலினாலேயே உடம்பகத்து உயிர் இருந்தும் அஃதுணர்வுடையதாய் இயங்கவில்லையெனவும், விழிப்பிலும் அஃது அகத்தும் புறத்தும் மாறி மாறி இயங்கும் முறைக்கு ஏற்பவே எல்லாவுயிர்களும் அகவுணர்வு புறவுணர்வு அடுத்தடுத்து நிகழப்பெறுகின்றன வெனவும் பகுத்தறிந்துகொள்க. இவ்வாற்றால், உள்ளத்தின் இயக்கமே உயிரினியக்கத்திற்கும் உடம்பினியக்கத்திற்கும் இன்றியமையாத கருவியாதல் தெற்றெனப்பெறப்படும்.

இங்ஙனம் எல்லாவுயிர்களின் உணர்வுநிகழ்ச்சிக்கும் முதற்பெருங் கருவியாயுள்ள மனவுணர்வு, உயிரையும் உடம்பையும் ஒன்றுசேர்த்து இயக்குந்திறத்ததாய் இருப்பினும், அஃது உயிரின் அறிவுமுயற்சியைச் சார்ந்துநின்று அதன்வழி இயங்குவதே யல்லால், அதனைவிட்டுப்பிரிந்து தான் தனிநின்று இயங்கவல்லதன்று. இவ்வுண்மை, உயிர்போன பிணவுடம்பில் மனவியக்கஞ் சிறிதுங் காணப்படாமையின்கண் வைத்துத் தெளிந்து கொள்ளப்படும். ஆகவே, உயிரின் அறிவுமுயற்சி யுளதாங்காறும், அதன் வழிநின்று உள்ளம் மிக்கதோர் ஆற்றலுடையதாய்த் தலைமை செலுத்தும் நீரதாமென்க. இதனை ஓர் உவமைமுகத்தானும் விளக்குதும்: தன்கீழ் வாழ்வாரெல்லார்க்குந் தலைவனாய் நின்று தனியரசு புரிவான் ஓர் அரசனேயாயினும், அவற்கும் அவன்கீழ் வாழ்வார்க்கும் இடைநின்று அரசியலை நடாத்தும் ஓர் அமைச்சன் இல்லாக்கால், அவ்வரசு செவ்வனே நடவாது; மற்றுத், தன் அரசன்



ஆணைவழி நின்று அரசியலைத் திறம்பட நடாத்தும் ஓர் அமைச்சன் உள்வழியே, அவ்வரசனும் அவன்கீழ் வாழுங் குடிகளும் இனிதியைந்து அரசியல் நன்கு நடைபெறுதற்கு இடஞ்செய்வர்; அதுபோல உயிரின் அறிவு முயற்சியே உடம்பின் இயக்கத்திற்குத் தனிமுதலாய் நிற்பினும், அதன்வயமாய் நின்று உடம்பினை நடாத்துதற்கு மனவியக்கமே இடைநின்றுதவும் முதற்பெருங் கருவியாதல் ஆராய்ந்தறியப்படுமென்பது.

இவ்வாறு உயிரின் அறிவுமுயற்சியால் உந்தப்பட்டு நடைபெறும் உள்ளமானது, உடம்பையும் உடம்பிலுள்ள உறுப்புகளையும் இயக்கி அவற்றைஉயிர்க்குப் பயன்படுமாறு செய்தலினாற்றான், உயிர்க்கு அறிவுவிளக்கமும் இன்பநுகர்ச்சியும் நாளுக்குநாட் பெருகாநிற்கின்றன. உயிர் ஒரு பூங்கொடியின் இயற்கையைத் தெரியவிரும்புமாயின், உடனே மனமானது கண்களை இயக்கி, அவை அதன் தண்டு இலை அரும்பு மலர் முதலிய உறுப்புகளை உற்றுநோக்கும்படி செய்து, அவ்வாற்றால் உயிர்க்கு ஆராய்ச்சியறிவினைப் பயப்பிக்கின்றது; அங்ஙனம் அவற்றை யாராய்ந்து அவற்றின் நுட்பஇயற்கைகளை அறியுந்தோறும் உயிர் பெரிதும் இன்புறுதலின், அதன் அவ்வின்பநுகர்ச்சிக்கும் உள்ளமே கருவியாய் நிற்றல் காண்க. இன்னும் அவ்வறிவாராய்ச்சியால் விளையும் அவ்வின்பமேயன்றி, அக் கொடி முல்லைமலர்களைப் பூப்ப தென்றாயின் அம் மலர்களின் நறுமணத்தையும் மூக்கின் வாயிலாய் ஊட்டி மேலும் அதற்கு அவ்வின்பத்தை மிகுத்தலுங் காண்டு மல்லமோ? இங்ஙனமெல்லாம் நமதுடம்பையும் உடம்பின் உறுப்புகளையும் உலகத்திலுள்ள பலதிறப்பொருள்களோடும் இயைத்து, அம்முகத்தால் நம்முயிர்க்கு அறிவையும் இன்பத்தையும் மிகுத்து வரும் அரும்பெறற்கருவியான நமதுள்ளத்தின் இயக்கத்தை நமது நல்லறிவுகொண்டு ஒழுங்கான நன்முறையில் இயக்கி வருகுவமாயின், நாம் நீண்டகாலம் உயிர்வாழ்தல் திண்ணம். அங்ஙனம் ஒழுங்கானமுறையில் அதனைச்செலுத்தாமல் ஒழுங்கற்ற முறையிற் செலுத்தலாலுந், தீயமுறையிற் புகுத்தலாலும், அதனைத் தான் நடாத்துதற்குச் சோம்பி ஐம்புலச்சுவைகளினால் ஈர்ப்புண்டு அது செல்லுமாறே தான் செல்லுதலாலுமே ஒருவன் பேரறிவையும் பேரின்பத்தையும் இழந்து, அவையிரண்டையும் இழந்தமை

யால் உடம்பின் நுண்ணியபேராற்றலையும் இழந்து, அஃதிழந்தமையால் உடம்பை நோய்க்கு இரையாக்கி அதனையும் விரைவில் இழந்து, மற்றுமொரு பிறவியை நாடி முடிந்துபோகின்றான் என்றுணர்ந்துகொள்க.

அற்றேல், உள்ளத்தை ஒழுங்கானமுறையிற் செலுத்துதலும், ஒழுங்கல்லா ஏனைமுறைகளிற் செலுத்துதலும் நன்குவிளங்குமாறு சிறிது விரித்துக்காட்டுகவெனிற், காட்டுதும். நாடகக் காட்சி இன்னதென்று அறியாஒருவன், அதன்வனப்பையும் அதனால்வரும் இன்பத்தையும் பலர் பலகாற்சொல்லக்கேட்டு, அதனை ஒருநாட் காணச்சென்றான்; சென்று, நாடகஅரங்கின்கட் கதைத்தொடர்புக்கு ஏற்ப அவ்வப்போது காட்டப்பட்ட அரண்மனைகள் பூந்தோட்டங்கள் காடுகள் முதலியவற்றின் அழகுகளையும், அரசகோலம் அரசிகோலம் பாங்கர் பாங்கியர் கோலம் துறவோர் கோலம் கள்வர்கோலம் முதலாயின பூண்டு நாடகமாந்தர் மிக்கதிறமையொடு பாடியும் ஆடியுங் காட்டிய ஒரு கதைநிகழ்ச்சியையுங் கண்டுகேட்டு, அதுகாறும் அடையாத ஒரு புதியஇன்பத்தை அடைந்து உள்ளங்களிப்பானாயினான். இங்ஙனம் நாடகக் காட்சியால் தான் ஒருநாள் அடைந்த இன்பத்தை மீண்டும் பலநாள் அடைய அவனுக்கு அவாமிக்கெழுந்ததாயினும், நாடோறும் பொருட்செலவு செய்துகொண்டு நாடகம் பார்க்கச்செல்லுதற்குத்தக்க வருவாய் இல்லாமையினையுந், தனக்குவரும் பொருள் தன்னையுந் தன்னைச்சார்ந்தாரையும் பாதுகாப்பதற்கும் பசித்துவருந்திவரும் ஏழை யெளியவர்கட்கு அறஞ்சிறிது செய்தற்குமே போதியதாயிருத்தலையும், அடுத்தடுத்து நாடகங்காணச்சென்றால் உறக்கங்கெட்டுத் தன்னுடல் நலங்கெடுதலையும் எல்லாம் எண்ணிப்பார்த்து, ஒருநாளடைந்த அக் காட்சியின்பத்தளவில் அவ்வவாவினை அடக்கி, மீண்டுந் தன்உள்ளம் அதன்கட்செல்லாது தடுத்து அதனை வேறுநல்லதுறையிற் செலுத்தியொழுகினான். இவ்வாறு தன்னுள்ளத்தைத் தன்பகுத்தறிவின் வழிவைத்துச்செலுத்தி, அவாவை அடக்குமிடம் அடக்கி விடுக்குமிடம் விட்டு ஒழுகுவானது ஒழுகலாறே ஒழுங்கானதாகுமென்று அறிந்துகொள்க.

இனி, அவ்வாறின்றித் தான் ஒருநாட்கண்ட நாடகக்காட்சியிலேயே உள்ளம் ஈர்ப்புண்டு, தன் வருவாயினையும், அதனைத்



தனக்கும் பிறர்க்கும் பயன்படுத்தும் வகைகளையும், நாடோறும் இராவிற் கண்விழித்தலால் தன்னுடல் நலஞ் சிதைதலையும் எல்லாம் எண்ணிப்பாராது அடுத்தடுத்து நாடகங் கண்டு, அதனால் வறுமையும் நோயுங்கொண்டு துன்புறுவானது ஒழுகலாறே உள்ளத்தை ஒழுங்கல்லாமுறையிற் செலுத்துவானதாகுமென்க.

இன்னும் இங்ஙனமே இன்பத்தைத்தரும் பிற இனிய காட்சிகளைக் காண்டலிலும், இனிய இசைகளைக் கேட்டலிலுஞ், சுவைமிக்க உணவுகளை அருந்தலிலும், நறுமணப் பண்டங்களை மோத்தலிலும், மெல்லிய அணைகளை உறுதலிலுங், காமவின்பத்தை நுகர்தலிலும் எல்லாம் உள்ளமும் அவாவுந் தன்வழி நிற்கவேண்டுமேயல்லால், தான் அவற்றின்வழி நிற்றலாகாது; வசதிகள் வாய்த்த காலங்களில் அவற்றை மனமகிழ்ந்து துய்த்தலும், வசதிகள் வாயாத காலங்களில் உள்ளத்தை அவற்றின்கண் உய்த்து வருந்தாமற் கிடைத்தமட்டில் நுகர்ந்து மனவமைதியோடிருத்தலுமே ஒருவன் நீண்டகாலம் வாழ்தற்கு வழியாகும்.

ஆனால், மக்களோ எளிதிலே நீக்கிவிடத்தக்க புல்லியபொருள் நுகர்ச்சிகளையும் விடாராய் அவற்றின்கண் அவாமிகுதியும் உடையராய் நடவாநிற்கையில், எளிதிலே நீக்கலாகாத பொருள்நுகர்ச்சியில் அவர் அவாவில்லாராய் ஒழுகுதல் யாங்ஙனங் கைகூடும்! இப்போது நாடெங்கும் பரவிவருங் காப்பி தேயிலை கோக்கோ நீர் எளிதிலே நீக்கத்தக்க புல்லிய பருகுநீராகும். இந் நீர்க்குடியால் மக்கட்குவரும் நோயுந்துன்பமும் அளவிறந்தன! இதுதெரிந்திருந்தும், அதனைக்குடிப்பவர்கள் அதனைச் சிறிதும்விடுகின்றார்களில்லை! உயிரைவிட்டாலும் விடுவோம் இதனைவிடோம் என்கின்றார்கள்! ஓர் உயிரைத் துடிக்கத் துடிக்கக் கொன்று அதன் ஊனைத் தின்பவர்கள், அது தீவினையென்றுணர்ந்து அதனை நோன்புநாட்களில் விலக்கிவைத்தும், மற்றைநாட்களில் அதனைவிடாராய் விழுங்குதலைப் பார்மின்கள்! அதனை நீக்கித், தன்னுயிர்க்கும் பிறவுயிர்க்கும் இனியவான காய் கனி விதைகள் கீரைகள் ஏராளமாய்க் கிடைக்கையில் அவற்றையுண்டு நீண்டகாலம் நோய்இன்றி இனிது உயிர்வாழலாமன்றோ? தமக்கும் பிறவுயிர்க்கும் நன்மை பயக்கத்தக்க இவ்வெளியமுறைகளைக் கைக்கொண்டு நடவாமல், இருபாலார்க்குந் தீங்கு விளைக்கத்தக்க தீய கொடிய முறைகளை விடாப்பிடி

யாய்க் கொண்டு நடப்பவர்கள் தாம்நீண்டகாலம் உயிர் வாழ வேண்டுமென்று விரும்பினால் அது கை கூடுமோ? ஆகவே, ஐம்பொறிகளின் வாயிலாக நுகரப்படும் பொருள்களினுந் தமக்கும் பிறர்க்குந் தீங்குதரத்தக்கவைகளைப் பகுத்தறிவால் ஆராய்ந்து பார்த்து விலக்கி, நல்லவற்றை நுகர்தலில்மட்டுமே உள்ளம்பதிந்து நிற்குமாறு செய்துபழகுக.

இனி, நல்லவற்றைத் தாமுந் தம்மைச் சார்ந்தாரும் நுகர்ந்து நீடு இனிது வாழ்தற்குச் செல்வப்பொருள் இன்றியமையாததாயிருத்தலின், அதனை எப்படியாவது முயன்று தொகுத்துக்கொள்ளக் கடவேமென்று அதன்கண் மட்டுக்கடங்கா அவாவைத்து நடவற்க. எத்தொழிலைச் செய்தாலும் அதனை நுண்ணறிவுடன் திறமையாய்ச் செய்யத்தக்கவனுக்குச் செல்வந் தானாகவே வந்து திரளும். அச்சுப்பொறி, நீராவிப் பொறிகளைச்செய்த மேனாட்டு அறிஞரின் நுண்ணறிவையுந் திறமையையுஞ் சிறிது உணர்ந்து பாருங்கள்! முதலில் அவைகளை மிக ஆழ்ந்தறிந்து செய்தவர்கள் பொருள்சேர்க்க வேண்டுமென்னும் பேரவாவினாலா அவற்றைச் செய்தமைத்தார்கள்? சிறிதுமில்லை. அவற்றால் உலகிற்கு உண்டாம் பெருநன்மையைக்கருதியே நுண்ணறிவாற் பெரிதுழைத்து அவற்றைச் செய்து முடித்தார்கள். செய்து முடித்தபின்னரோ அவர்க்கும் அவரைச் சார்ந்தார்க்கும் அவர் வழியில் வந்தார்க்குமெல்லாம் பெரும்பொருள் தானாகவே வந்து குவியாநின்றது; அவற்றால் உலகம் எங்கணும் விளைந்துவரும் நன்மைகளோ அளப்பில்லாதன. இவ்வரும்பெருந் தொழிற்றுறைக்கு ஒப்பவே, மிக எளிய தொழிற்றுறைகளுக்கும் நுண்ணறிவும் உண்மையுழைப்புமே முதன்மையாக வேண்டப் படுவன. உலகவாழ்க்கையில் தமக்கு அடுத்தடுத்து நேரும் இடர்ப்பாடுகளை எவர் தமது நுண்ணறிவு முயற்சியால் எளிதில் விரைந்து நீக்கி விடுகின்றனரோ அவர்க்கு மக்கள் மனங்களித்துத் தமதுபொருளைக் கொடுக்கின்றனர். இதற்கு ஒருசிறிய எடுத்துக்காட்டு வருமாறு: செல்வத்திற் சிறந்த ஒரு வணிகர் தாம் சீனத்திற்குச்சென்று அங்குப் பெரியதொரு வாணிகம் நடாத்த எல்லா ஏற்பாடுகளுஞ்செய்து, தாம் அவ்வூர்க்குப் புறப்படுங் கப்பலில் ஏறுதற்கு இரண்டு மணி நேரமேயிருந்தது. இவர் தம்முடன் எடுத்துச்செல்ல விரும்பிய



எல்லாப்பண்டங்களையும் வண்டியில் ஏற்றிவிட்டார். கடைசியாகத் தாம் தம்முடன் கொண்டுசெல்லவேண்டிய பெரும்பொருட்டொகையை எடுப்பதற்கு, அது வைத்திருந்த இருப்புப்பெட்டியைத் திறக்கச்சென்றார். ஐயோ! அந்நேரத்தில் அதன்சாவி எப்படியோ காணாமற் போயிற்று. எங்கேதேடிப்பார்த்தாலும் அது கிடைக்கவில்லை! நேரமோ ஆகின்றது! செட்டியாரோ பதைத்துத் துடிக்கின்றார்! அவர்தம் ஏவலாட்கள் எத்தனையோ வகையான சாவிகளைக்கொணர்ந்து முயன்றுபார்த்தும், அச்சாவிகளுள் ஒன்றும் பொருந்தாமையால் அப்பெட்டிதிறக்கவில்லை. இன்னும் முக்கால்மணி நேரந்தான் இருக்கின்றது! ஒவ்வொரு நொடிப்பொழுதும் அருமைமிக்கது! எல்லாரும் மிகப் பதைபதைத்து வருந்தும் அந்நேரத்தில் ஓர் ஏவலன் ஒரு தொழிலாளியைக் கொணர்ந்தான். அப்பேழையண்டைவந்த அத்தொழிலாளி அதன் சாவித்தொளையைச் சிறிதுநேரம் உற்றுநோக்கினான்; நோக்கியபின் தான் எடுத்துவந்த கருவிகளுள் ஒன்றை அதன் சாவித்தொளையில் நுழைத்துச் சிலமுறை திருப்பினான்; உடனே படீரெனக் கதவுதிறந்தது! அது கண்டதும் அச்செட்டியார் மட்டுக்கடங்காக் களிப்பினால் துள்ளிக்குதித்து, அத் தொழிலாளியின் கையைப்பிடித்துக்குலுக்கி வாழ்த்தி, அவனதுதிறமையை வியந்து, பெட்டியினுள் தாம் வைத்திருந்த பணப்பையை யெடுத்து அவிழ்த்து, ஒருநூறு ரூபா முறியை (Bank note) அவன்கையிற் கொடுத்து நல்லுரைகூறி அவனைப்போக்கி, உடனேதாமும்போய்க் கப்பலில் ஏறியமர்ந்தார். அவர் ஏறிய ஒருநிமிஷத்திலெல்லாங் கப்பலும் புறப்பட்டது! இந்நிகழ்ச்சியில்வைத்து நுண்ணறிவுமுயற்சியுடையான்றன் அளப்பரிய அருமை பெருமையினை அளந்து பார்மின்கள்! எளிதில் நீக்குதற்கியலாமல் நேர்ந்த இடர்ப்பாடொன்றிற் சிக்குண்டு ஒருவன் துடிக்குங்கால், அவனுக்கு அளவுபடாச் செல்வமிருந்தென்செய்யும்! மனைவிமக்கள் உற்றார் பெற்றார் ஏவலர் நண்பரெல்லாமிருந்தும் அவர் என்செய்வர்! அந்நேரத்தில் அவ்விடர்ப்பாட்டினின்றும் அவனை விடுவிக்கத் தகுந்த நுண்ணறிவு முயற்சியுடையானன்றோ அவனுக்கு உயிர்த்துணையாவன்! அவ்வறிஞனையன்றோ அவன் பற்றுக்கோடாய்ப்பற்றி உயிர்பிழைப்பன்! அவ்வறிஞனுக்கன்றோ தன்பொருளையெல்லாங் கொடுத்து

மகிழ்வன்! ஆதலால், நுண்ணறிவுமுயற்சி யுடையானுதவியை நாடாதார் உலகில்எவருமே யில்லையென்றுணர்ந்துகொள்க. நுண்ணறிவு முயற்சியுடையான் றலைக்கடையில் திருமகள் போந்து காத்திருப்பளாதலின், அவன் செல்வத்தின்மேற் பேரவாவைத்து அதனை நாடியொழுகுதல் எற்றுக்கு? இவ்வுண்மையை யுணர்ந்து தற் கன்றோ **தெய்வத்திருவள்ளுவர்,**

“அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்
என் உடையரேனும் இலர்” என்று அருளிச்செய்தார்.

ஆகவே, நுண்ணறிவு முயற்சியுடையார்க்குச் செல்வந் தானாகவே வந்து குவிதல் திண்ணமாகலின், அதனைத்தொகுத்தலிற் பேரவாக் கொண்டு நடவாமல், தம் அறிவையும் முயற்சியையும் மேன்மேற் பெருக்குவதிலேயே எல்லாருங் கருத்துவைத்து நடத்தல் வேண்டும். தமது முயற்சியைக் காலத்திற்கு ஏற்றபடியாகவும் இடத்திற்கு ஏற்றபடியாகவுந், தாமிருக்கும் இடத்தில்உள்ள மக்களுக்குப் பயன்படும் படியாகவும் நன்காராய்ந்து செய்தல் வேண்டும். அவற்றோடு ஒவ்வொருவருந் தத்தம் நிலைமைகளை எண்ணிப் பார்த்து, அவற்றிற்கு ஏற்பவே பொருள் ஈட்டும் முயற்சிகளைச் செய்தல்வேண்டும். மழைகாலத்திற் செய்தற்குரிய பயிர்த்தொழிலை அக்காலத்திற் செய்யாமற் கொடிய வேனிற்காலத்திற் செய்யும் அறிவிலி அதனாற் பயன் பெறுதல் கூடுமோ? களர் நிலத்தில் விளைத்தற்குரிய உப்பினைக் கொழுவிய வயல்நிலத்திலும், வயல்நிலத்தில் விளைத்தற்குரிய நெல்லினைக் களர் நிலத்திலும் ஒருவன் விளைக்க முந்துவனாயின் அப்பேதையின் முயற்சி ஒரு சிறிதும் பயன்படாதென்பதனை யார்தாம் அறியார்? அங்ஙனமே, கல்வியறிவு பெறுதலிற் கருத்தில்லாக் கயவர் மிகுந்திருக்கும் ஓர் ஊரிற், கலைநூல்கள் விற்குங் கடையொன்று வைத்தால் அம்முயற்சியைத் தொடங்கினவனல்லனோ இகழப்படுவான்? ஊன் உண்ணும் புலையர்கள் நடுவில் உயர்ந்த காய் கனி வித்துக்கள் கிழங்குகள் விற்கப்புகுமொருவன் எவ்வளவு ஊதியம் பெறக்கூடும்? அங்ஙனமே ஊன் உண்ணா அருளாளர் உறையும் ஓர் ஊரில் ஊன் விற்பான் பொருள்ஈட்டுதல் இயலுமோ? இன்னுந், தன்கையில் ஐந்து பொற்காசுகளுக்குமேல் வைத்திராதவன், அவைகொண்டு ஆயிரம் பொற்காசுதிரட்ட அவாவினால் அஃதுடனே அவற்கு



நிறைவேறி விடுமோ? உயர்ந்த அறிவுநூற்கல்வி யில்லாதவன், பிறர்க்குத் தான் அறிவுரைகூறி அவர்பாற் காணிக்கைபெற விரும்பினால், அவன் எல்லாராலும் வெறியன்என்று எள்ளப்படுதலன்றி வேறு என்பெறுவன்? ஆகையால், எவருங் காலத்தையும் இடத்தையும் இடத்திலுள்ளமக்களையுந் தமதுநிலையையும் எண்ணிப் பார்த்து அவற்றிற்குத் தக்க முயற்சிகளை ஒழுங்காகச்செய்து பொருள்ஈட்டக் கடவராக!

அவ்வாறு அவாவை அடக்கிப் பொருள்ஈட்டும் முயற்சியைச் செவ்வனே செய்யாமற், பொருளையே அவாவிநிற்பவன் எந்தவகையிலாவது அதனைப் பெறுதற்கு முனைகுவனாதலின், அவன் அதன்பொருட்டு எத்தகைய தீவினையுஞ்செய்தற்குப் பின்வாங்கான். பொய் புனைசுருட்டுக் கொலை களவு முதலானகொடுந் தீவினைகளைச்செய்வாரிற் பெரும்பாலார் எதன்பொருட்டு அவைகளைச் செய்கின்றனர் என்று ஆராய்ந்து பார்த்தாற் பொருளின் பொருட்டாகவே அவைகளைச் செய்கின்றனர் என்பது தெள்ளிதிற் புலனாம்.

இனிப், பொருள்மேற் செல்லும் அவாவுக்கு அடுத்தபடியாக மாதரார்மேற் செல்லும் அவா வாகிய காமமும் அடக்க வேண்டுமிடத்து அடக்கி விடுக்க வேண்டுமிடத்து விடுக்கற் பாலதாயிருக்கின்றது; ஒருவர் காமத்தைத் தமதெண்ணத்தின் வழிவைத்து ஒழுகுங்காறும் அவர்க்கு எல்லா நலங்களும் உளவாமாகலின், அவர் நீண்டகாலம் உயிர்வாழ்தல் திண்ணம். தமக்கு உரியவரேனும் அவர்பால் வரைகடந்து காமவின்பந் துய்க்கலுறுவார்க்கு உடல்நலங் கெடுமாகலின் அவர் நீண்டகாலம் உயிர்வாழ்தல் இயலாது. ஆகவே, தமக்குரியார்மாட்டும் மேலத்தியாயங்களில் விளக்கிக்காட்டியபடி ஒருவரையறையுள் வைத்து அதனை நுகர்வாரே நெடிது வாழ்வர். மற்றுத், தமக்குரியரல்லாதார் பாற் காமவேட்கை மிகக்கொண்டு அலைபவர்களோ, வரையிறந்த பொருட்பற்றுடையாரைப் போலவே கொடுந்தீவினைகளைச் செய்தற்கு உளங்கூசாராதலால், அவரும் நீண்டகாலம் உயிர்வாழ்தல் அரிதேயாம். ஆகவே, உடலோம்புதற்கு வேண்டும் பொருளிலும், உடலும் உயிரும் ஒருங்கு ஓம்புதற்கு வேண்டுங் காம நுகர்ச்சியிலுஞ் செல்லும் அவாவைத் தம்வயமா வைத்து அவை

யிற்றை ஒருவரையறைப்படுத்து ஒழுகுவாரே நீடுவாழ்தற்குரியா ராதல் பெறப்படுதல் காண்க.

இவ்வாறு அவாவைத் தம்வயமா வைத்து ஒழுகுவார்க்குக் கவலையும் அதுபற்றிவரும் மனநோயும் உண்டாகா. அவையில வாகவே, அவர் நரை திரை மூப்புப் பிணிகள் இலராய் என்றும் இளைஞராகவே யிருப்பர். மற்றுக் கவலையுந்துன்பமும் உடையாரோ விரைவிலே மூத்து விரைவிலே மாண்டுபோவர். கவலையுடையான் முகஞ் செழுமையாய் இராது, வாடி வதங்கியிருக்கும்; அவனுடம்பில் வலிமையே இராது; அவனறிவு தெளிவில்லாது மழுங்கிப்போய்விடும்; அவன் ஏதொருமுயற்சியையும் நன்கெடுத்து முடிக்கமாட்டான். யாம் சிறுபிள்ளையாயிருந்தகாலத்து ஒருவர் சொல்லக்கேட்ட ஒருசிறுகதையை இங்கெடுத்துக் கூறுதும். ஒருகாலத்தில் ஓர் ஊரில் ஓர் ஏழைக்குடியாயிருந்த ஒருவனுக்கும் அவன்மனைவிக்கும் ஓர் ஆண்மகன் பிறந்தான். அவன் பிறந்துவளர்ந்த சில்லாண்டுகளிலெல்லாம் அவன்றந்தை இறந்து போயினன். அறுதலியான அவன்தாயோ தனக்குள்ள ஒருமகனையன்றி வேறெவரும் இல்லாமையால், அவனைத் தன் உயிராக நினைந்து கண்ணுங்கருத்துமா வளர்த்துவந்தாள். கைப்பொருள் ஏதும் இல்லாமையால், நெல்லுக்குத்தியும் இல்லங்கடோறுந் தண்ணீர்க்குடந் தூக்கியும் எளிய பிறவேலைகள்செய்தும் பெற்ற சிறுபொருள்கொண்டே அவனை அங்ஙனம் வளர்த்து வருவாளாயினள். இவ்வாறு வளர்க்கப்பட்டு வளர்ந்த அப்பையனுக்கு இருபதாண்டு நிரம்பிற்று. அவன்தாய் கல்வியறிவும் இயற்கைப்பகுத்தறிவும் இல்லாதவள் ஆதலால், அவனைக் கல்விபயிலவுஞ் செய்திலள், அவன் வேறுகைத்தொழிலிற் புகுந்து பணந்தேடவுந் தூண்டிற்றிலள். நாடோறுந் தானேபாடுபட்டுத் தேடிக்கொணர்ந்த பொருள்கொண்டே அவனைக் காப்பாற்றிவந்தனள். அவள்மகனோ நன்றாய் உண்பதும் உறங்குவதும் மனக்கிளர்ச்சியோடு ஊர் சுற்றுவதுந் தவிர வேறு பொருள்தேடும் முயற்சியிற் சிறிதும் புகுந்திலன். இவன் தனக்குள்ள உடம்பின் திமிர்வால், அவ்வூரின் அரண்மனை வாயிலிற் கட்டப்பட்டு நின்ற ஓர் யானையினிடம் போய் அதன் தும்பிக்கையைப்பிடித்து இழுத்து முறுக்கி, அதற்குத் தன்வலிமைகாட்டி அதனோடு விளையாடத்துவங்கினன். அவ்



வியானையும் அவன்றன் உடல்வலிமையும் மனவலிமையுங் கண்டு அவன் தன்னோடு வலிமைகாட்டி விளையாடுதலுக்கெல்லாம் இசைந்திருக்கும். இவ்வாறு சிலகாலம் நடந்துவருகையில் அவ்வூர் அரசன் தன் அமைச்சனுடன் அவ்வரண்மனையின் மேன்மாடத்தில் ஒருநாட்காலையில் உலாவிக்கொண்டிருந்தவன், இவ்விளைஞன் அஞ்சாநெஞ்சினனாய்த், தன் அரண்மனைவாயிலில் நிற்கும் யானையுடன் வலிமைகாட்டி விளையாட்டயர்தலைக்கண்டான். கண்டு அவன்வலிமையினை வியந்து, தன் அமைச்சற்கும் அதனைக் காட்டி, "ஐய, இவ்விளைஞற்கு நம்யானையினுடன் இங்ஙனம் விளையாடும் ஆண்மையும் வலிமையும் எங்ஙனம் வந்தன?" என்று வினவினன். கூர்த்த அறிவினனான அவ்வமைச்சன் "அண்ணல், இவன் கவலையும் அச்சமுந் துன்பமுஞ் சிறிதும் இன்றி வளர்ந்தவனாகல் வேண்டும். அதனாலேதான் இவ்வளவு நெஞ்சழுத்தமும் உடற்றிமிரும் இவன்பாற் காணப்படுகின்றன. இன்னுஞ்சிலநாட்களில் இவனது நிலைமையில் வேறுபாடு காட்டுகின்றேன்" என்று அரசற்குக்கூறினன். கூறி இரண்டொருநாட் கடந்தபின், அவ்வமைச்சன் தானே அவ்விளைஞன் இருக்கும் வீடுதேடிச்சென்று, அவன்வீட்டில் இல்லாதநேரத்தில் அவன்றன் அன்னையை அருகழைத்து, "அம்மே, நின்மகன் எப்படி நாட்கழிக்கின்றான்? உங்களது பிழைப்பு எப்படிநடக்கின்றது?" என்றுகேட்க, அவள் தம்வரலாறு முழுதும் எடுத்துரைத்து "யானே அரும்பாடுபட்டு என் ஒரேமகனைப்பாதுகாத்து வருகின்றேன். அவனுக்கு ஏதொரு பாடும்படத்தெரியாது." என்று விடைபகர்ந்தாள். அதற்கு அவ்வமைச்சன், "கள்ளம்அறியாத அம்மையே, உனக்குப்பிறகு அவன் எப்படிப்பிழைப்பன்? நன்றாக் வேலைசெய்து பிழைக்கக்கூடிய அவனை யார் காப்பாற்றுவர்? இதனை நீ எண்ணிப்பார்க்க வேண்டாமா? நீ உயிரோடிருக்கும் போதே அவன் ஒரு கைவேலைசெய்து பணந்தேடிக் கொணர்ந்து கொடுக்கும்படி தூண்டு!" என்றுவற்புறுத்திச்சொல்ல, அவ்வேழை மாது "ஐயா, அவனை நான் எப்படி வேலைக்குப்போ! என்று சொல்வேன்? எனக்கு ஒன்றுந்தோன்றவில்லையே!" என்றுமனக் கலக்கத்தொடுகூறினள். அதுகேட்ட நுண்ணறிவினனான அவ்வமைச்சன், "அம்மா, நாளைக்கு நீ நின்மகனுக்கு உணவிடுங்கால்

எல்லாம் உப்பு இல்லாமல் இடு! அவன் சுவைபார்த்து உப்பு இல்லையேயென்றால், அப்பா, நான் எதுசெய்வேன்! இத்தனை காலம் பெரும்பாடுபட்டுப் பணந்தேடி உன்னைக்காப்பாற்றி வந்தேன். இப்போது என்னாற்பாடுபடமுடியவில்லை, என் உடம்பில் வலிவில்லை, அதனாலே உப்புவாங்கக் கையிற் காசும்இல்லை. நீ எங்கேயாவது காசுதேடி உப்புவாங்கி வந்தால், அதனைச்சேர்த்துச் செவ்வையாகச் சமையல்செய்து வைப்பேன்; என்று அவனுக்குச் சொல்லிவிடு, அதன்பிறகு அவன் பணந்தேடும் முயற்சியைச் செய்வான்.” என்று அவட்கு அறிவு சொல்லிக்கொடுத்துத், தன்னில்லம் ஏகினான். அவ்வம்மையும், மறுநாள் உணவெடுக்கவந்த தன்மகனுக்கு, அமைச்சன் கற்பித்தவாறே உப்பில்லா உணவு வைக்க, அவள்மகன் அதைச்சுவைபார்த்து உப்பில்லையேயென்ன, அவள் தன்னாற் பாடுபட இயலாமையால் உப்புவாங்கக் காசில்லையெனவுங், காசுதேடிக்கொணர்ந்தால் சமையல் செவ்வையாக முன்போற் செய்யலாமெனவுங் கூறினாள். அதுகேட்ட அவ்விளைஞன் மிக்க கவலையுடையோனாய், உப்பில்லா அவ்வுணவை அரைகுறையாய் விழுங்கிவிட்டு, வெளியேபோய்க் காசுதேடும்முயற்சி எதுவென்று ஆராய்வானானான். இங்ஙனங் கவலையும் வருத்தமுங் குடிகொண்ட மனத்தினனாகவே, அவன் தன் உடல்உரங் குறைந்து சோர்வடையப்பெற்றான். என்றாலும், அவன் வழக்கம் போல அரண்மனைவாயிலிலுள்ள யானையினுடன் திமிர்வுகாட்டி விளையாட மறுநாட்காலையிற்சென்றான். முன்போலின்றி அவன்றன் உள்ளமும் உடலுஞ் சோர்ந்துபோனமையாற், பழமைபோல் அவன் அவ்வியானைத் தும்பிக்கையைப் பிடித்திழுத்து முறுக்கமுடியாமல் அஞ்சிநின்றான்; அவ்வியானையும் அவனது வலிவின்மைகண்டு அவனைத்தூக்கி அப்புறம் எறிந்தது. இவையெல்லாம் அரண்மனை மேன்மாடத்தில் அமைச்சுடனிருந்து கண்ட மன்னன், “ஐய, ஈதென்னை! நேற்றவரையில் நம்யானையுடன் திமிர்வுகாட்டி விளையாடிய இவ்விளைஞன், இன்று இவ்வளவு சோர்வுடையனாய்த் தான்அதனை இழுக்கமாட்டாமல், அதனால் தான்இழுப்புண்டு எறியப்பட்டனனே!” என்ன, அமைச்சன் தான் அவன்அன்னைக்குச் சொல்லிச் செய்வித்ததனையெடுத்துரைத்தான். இச்சிறுகதையால் அறியப்படும் உண்மையாது?



கவலையுந்துன்பமும் இல்லாதவரையில் மக்களின் உள்ளமும் உடலும் உரமாயிருக்குமென்பதூஉம், அவையுண்டானவுடனே அவ்விரண்டும் உரமிழந்துசோருமென்பதூஉம் அல்லவோ? ஆகையாற், கவலைக்குந் துன்பத்திற்கும் வித்தான அவாவைத் தன்வயமாக நிறுத்தி நடக்கவல்லானுக்கு அவையிரண்டும் இல்லாதொழியுமாகலின், அவன் உள்ளமும்உடலுஞ் செழிப்புடன் நெடுநாள் வைகுமென்பது தேற்றமாம்.

இனிப், புறப்பொருள்களுட் கண்டகண்டவற்றின் மேலெல்லாம் அவாவினைச்செல்லவிடாது தடுத்துஒழுகும் மனத்திட்பம் உடையானுக்குங் கவலையுந் துன்பமும் வருதல் காண்டுமாலெனின்; அஃதுண்மையே. ஒருவன் தானிருந்துயிர்வாழுந் தன்னில்லத்திற்குப் புறம்பேயுள்ள பொருட்டொடர்புகளைத் தான் வேண்டியவாறு கைக்கொள்ளுதலுங் கைவிடுதலுஞ் செய்தல் கூடும். ஆனால், அவ்வில்லத்தினுள்ளே தன்னோடு ஒருங்கிருந்து உயிர்வாழுந் தன்மனைவிமக்கள் முதலாயினாரதுதொடர்பினை அங்ஙனந் தான் விரும்பியவாறு தொடுதலும் விடுதலுஞ் செய்தலோ எளிதில் முடியாது. ஆகவே, மனத்திட்பம் உடையானுக்குந் தன் மனைவிமக்களால் வருங் கவலையுந்துன்பமும் அவனை ஓவாது வருத்துந் தன்மையவாய் அவனை நனவினுங்கனவினும் நிழல்போற் பற்றிநிற்குமென்பது உணரப்படும். மற்று, மனைவிமக்கள் உடன்பிறந்தார் சுற்றத்தாரெல்லாந் தன் எண்ணப்படி நடக்கும் நல்லராய் வாய்க்கப்பெற்றானுக்கோ அதனின் மிக்கபேறு பிறிதின்மையால், அவன் என்றும் இளைஞனாய் இனிது வாழ்தல் உறுதியேயாம். இதனைப் பழையநாளில் உண்மையாகநடந்த ஒரு வரலாற்றினால் நன்குவிளக்கிக் காட்டுவாம்.

இற்றைக்குச் சிறிதேறக் குறைய ஓராயிரத்துத் தொளாயிர ஆண்டுகட்குமுற் பாண்டிநாட்டிற் பிசிர் என்னும் ஊர்க்கண்ணே **ஆந்தையார்** எனப்பெயரிய பெருந்தமிழ்ப்புலவர் ஒருவர்இருந்தார். அதேகாலத்திற் சோழநாட்டில் உறையூரின்கண்ணே செங்கோல் செலுத்திய **கோப்பெருஞ்சோழன்** என்னும்மன்னன் ஒருவனுஞ் செந்தமிழ்ப்புலமையிற் சிறந்துவிளங்கினான். இவ்விருவரும் ஒருவரையொருவர் நேரிற் காணாராயிருந்தும், கேள்வியளவில் ஒருவர் ஒருவர்பால் உயிரினுஞ்சிறந்த நட்புரிமைகொண்டு

அன்புருவாய்த்திகழ்ந்தனர். பிசிராந்தையாரை எவரேனுந் தலைப்பட்டு "நும்பெயர் யாது?" என வினவின், அவர் தம்பெயரைச் சொல்லுதலொழிந்து, தம் ஆருயிர் நண்பனாகிய கோப்பெருஞ் சோழன் பெயரையே தம்பெயராக மொழிகுவர். இவ்வாறே நீண்டகாலங்கழிந்தது. பின்னர் ஒருகாற், கோப்பெருஞ்சோழனுக்கும் இளஞ்சேரவிரும்பொறை யென்னுஞ் சேரமன்னனுக்குங் கடும்போர்மூண்டது. அப்போரிற் கோப்பெருஞ்சோழன் தோல்வியடைந்தானாகலின், தோல்வியடைந்தபின் உயிர்வாழ்தலில் அவன் விருப்பிலனாய், வடக்குநோக்கியபடியாய் இருந்து பட்டினிகிடந்து உயிர்துறப்பானாயினன். அங்ஙனம்அவன் உயிர்துறக்கப் புகுகின்றுழித், தன்ஆருயிர் நண்பராகிய பிசிராந்தையாரை நினைந்து, தன்மருங்கிருந்த சான்றோரைநோக்கி, "யான் உயிர்துறந்தபின் அதுகேட்டு என்ஆருயிர் நண்பராகிய பிசிராந்தையார் சிறிதுந்தாழார்; அவர் உடனே இவண்போந்து என் மருங்கே உயிர்துறப்பர்; ஆதலால், என்பக்கலிலே அவர்க்கும் இடன்ஒழித்து வைம்மின்கள்!" என்றுகூற, அதற்கவர்கள் "இவ்வல்லற் காலையில் அவர்வாரார்" என்றுரைப்ப, மீண்டும்அவன்,

"கேட்டன் மாத்திரை யல்ல தியாதுங்
காண்டல் இல்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராயினும்,
அரிதே தோன்றல்! அதற்பட ஒழுகல்என்று
ஐயங் கொள்ளன்மின்! ஆரறி வாளீர்!
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே,
தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னுஞ் சிறந்த
காதற் கிழமையும் உடையன், அதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்,

இன்னே வருகுவன், ஒழிக்க அவற்கிடமே" (புறநானூறு, ௨௧௬) என்று நுவன்றான். அவன் நுவன்றவாறே, தம் ஆருயிர் நண்பனை கோப்பெருஞ்சோழன் உயிர்நீத்தான் என்னுஞ்சொற் கேட்ட துணையானே பிசிராந்தையாரும் ஓரிமைப்பொழுதுந் தாழாராய்த் தாமும்அவன்மருங்கே உயிர்நீத்தற்கு அவன்உயிர்



போக்கிய இடமேபோந்தார். போந்த பிசிராந்தையாரை அங்கிருந்த சான்றோரெல்லாருங் கண்டு வியந்து, அவர் ஆண்டில் மிக முதியராயிருந்தும் நரை திரை மூப்பு இன்றி இளையவடிவினராய்த் திகழ்தல் நோக்கிப் பின்னும் பெருவியப்புடையராய்க் "கேட்குங்காலம் பலவாலோ, நரை நுமக்கில்லையாலோ?" என்று அவரைவினவப், பிசிராந்தையார்,

"யாண்டுபல ஆக நரையில ஆகுதல்
யாங்கா கியர்? என வினவுதி ராயின், ·
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்,
யான் கண் டனையர் என் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும், அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே" (புறநானூறு, ௧௯௧)

என்னும் அரியசெய்யுளால் அவர்க்கு விடைகூறித், தம் நண்பனாகிய அச்சோழன் பக்கத்தே கிடந்து தாமும் உயிர்நீத்தார்.

இவ்வரிய பண்டை நட்புவரலாற்றிலிருந்து ஈண்டைக்கு நாம் ஆராயற்பாலன அதன்ஈற்றில் யாம் காட்டிய மேலைச்செய்யுட் பொருள்களேயாகும். ஒருவன் யாண்டில் மிக முதியனாயிருப்பினும் உடம்பிலும் முயற்சியிலும் அவன் இளைஞனாயிருப்பதற்குக் காரணம் முதற்கண் அவன்மனையாள் அழகிலும் அறிவிலும் அன்பிலுஞ் சிறந்தவளாயிருத்தலே யாகுமென நல்லிசைப் புலவராகிய பிசிராந்தையார் கூறுகின்றார். ஏனென்றாற் புறத்தே சென்று பொருள்தேடும் அல்லலிற் பட்டுழன்று அயர்ந்து தன்னில்லந் திரும்பிய ஒருவன், கவர்ச்சிமிக்க தோற்றமுடையளாகிய தன் மனைவியைக் கண்டதுணையானே தான் பட்ட துன்பங்களையெல்லாம் மறந்து இன்பம் எய்தப்பெறுகின்றான். அதன்மேலும், அவள் தன்கணவன் நிலையினையும் அவனது வருவாய் நிலையினையும் நன்கறிந்து அவற்றிற்கு ஏற்ப ஒழுகுதலுந், தன்வீட்டிலுள்ளார் வருந்தாமல் அவர்கள் உவக்குமாறெல்லாம் மனைவாழ்க்கையை நடத்துதலுந், தான் ஈன்ற மக்களை நோயின்றி நற்குண நற்செய்கைகளிலுங் கல்வியறிவிலும் மேம்படுமாறு வளர்த்தலும், வந்த விருந்தினரை முகனமர்ந்து ஓம்புதலும், அற்றார்க்கும் அலந்தார்க்கும் அறஞ் செய்தலும் பிறவுமாகிய இல்லற முயற்சிகளை

நடைபெறுவித்தலில் வல்ல இயற்கையறிவும் அதனோடு ஒருங்கி யைந்த கல்வியறிவும் மெய்யன்பும் உடையளாயின், இல்லத்தி னுட்புகுந்த அவள்கணவன் எவ்வளவு மகிழ்ச்சியும் எவ்வளவு பேரின்பமும் அடைந்தவனாயிருப்பன்! அத்தகையவனுக்குக் கவலையேது? துயரம் ஏது?

மற்று, அழகில்லாத ஒருத்தியை மனையாளாகப் பெற்றவனுக்கோ, அழகினைக்கண்டு அடையும் ஒரு சிறந்தஇன்பம் இல்லையாய் ஒழிகின்றது! அங்ஙனமே அழகில்லாத ஒருவனைக் கணவனாகப் பெற்றவளுக்கும் இல்வாழ்க்கையானது சாறில்லாத சக்கைபோலாய்விடுகின்றது. திருத்தமான அமைப்பும் மினுமினுப்பான நிறனும் வாய்ந்த வடிவத்தைக் கண்டுமகிழாதவரும் வியவாதவரும் உலகில் எவருமேயில்லை. அங்ஙனமே ஒன்றினொன்று ஏற்றக் குறைவான உறுப்பமைவும் மங்கியநிறமும் உடைய அருவருப்பான வடிவைக்கண்டு வெறுப்படையாதவரும் எவருமேயில்லை. தொழுநோய் (குட்டம்) படைநோய் கொண்ட வடிவங்களையும், மூக்கு விழி வாய் காது கன்னங் கை கால் முதலான உறுப்புகள் பழுதுபட்ட வடிவங்களையுங் காணநேர்ந்தால், நாம் எவ்வளவு உள்ளம் உவர்ப்புற்றுந் திகில் கொண்டும் அப்பால் திரும்பிப் போகின்றோம்! மற்றையோர் எழுதிய ஓவியங்களை விட இரவிவன்மர் வரைந்த ஓவியங்களைக் கண்டு நாம் ஏன் பெருமகிழ்வுறுகின்றோம்? அவற்றின்கண் உள்ள ஆண் பெண் வடிவங்களின் திருந்திய அமைப்பையும் ஒளிவிளக்கத்தையுங் கண்டன்றோ? எருக்கம்பூவைக்கண்டு அருவருச்கும் நாம் வெள்ளிய அல்லிமலரைக்கண்டு மகிழ்வது ஏன்? அல்லிமலரின் அழகையும் நிறத்தையும் மணத்தையுங் கண்டன்றோ? பிற்காலத்தவர் இயற்றிய தமிழ்ச் செய்யுட்களைக்கண்டு அருவருக்கும் நாம், முற்காலத்து நல்லிசைப் புலவர்கள் இயற்றிய **அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், திருக்கோவையார்** முதலான நூற் செய்யுட்களைப் பல்காலும் பயின்று பயின்று இன்புறுதல் என்னை? அவை, மக்களினும் உலக இயற்கையிலும் ஆங்காங்குக் காணப்படும் எழில் கிளர் தோற்றங்களையும் நிகழ்ச்சிகளையும் உண்மைக்கு மாறாகாமல் எடுத்து நம் அகக்கண்ணெதிரே காட்டுதலாலன்றோ? இருந்தவாற்றால் அழகிய வடிவங்



களும் அழகிய காட்சிகளும் உலகத்திற் காணப்படாவாயின், உலகவாழ்க்கையே வெறும்பாழாய் விடுதலுடன், இறைவன்றன் படைப்பின் ஆற்றலும் ஒரு சிறிதும் விளங்காதொழியும். அவையிரண்டும் இல்லையாகவே, அழகுணர்வும் அதுபற்றிவரும் இன்ப எழுச்சியும் இலராய் மக்கள் எல்லாரும் விலங்கினங்களினுங் கடைப்பட்ட வாழ்க்கை யுடையராய் ஒழிவர். அங்ஙனம் ஆகாமைப் பொருட்டும், அழகுக்கே ஓர் உறையுளாய் உள்ள தன்னை எல்லாரும் நினைந்துருகி இன்புறுதற்பொருட்டுமே எல்லாம்வல்ல இறைவன் அழகிய வடிவங்களையும் அழகியகாட்சிகளையும் ஆங்காங்கு விளங்க அமைத்திருக்கின்றான்.

அற்றேல், அழகில்லாதனவும் ஆங்காங்கு மிகுதியாய்க் காணப்படுதல் ஏனென்றாற் கூறுதும். இறைவனது அழகியஅருள் எல்லாப் பொருள்களினுள்ளும் எல்லா உயிர்களினுள்ளும் நிறைந்து நின்று அவைதம்மை யெல்லாம் அழகியவாகவே உருவாக்கி வருகின்றது. என்றாலும், அப்பொருள்களிலும் உயிர்களிலும் ஒருபாலன அழகினை மிகுக்கும் அருட்செயலுக்குப் பெரிதும் இடந்தந்து இசைவாய்ப்போதர, மற்றொருபாலன அவ்வழகினைக் கெடுக்கும் மருட்செயலுக்கு மிகுதியாய் இடந்தந்து அருளொடு மாறுகொண்டு கிடத்தலின் அவை அழகியவாய் உருவாக்கப்படாமல் அருவருக்கப் படுவனவாயும் பயன் இலவாயும் இருக்கலாயின. பசும்பொன்னிலே சிறந்ததொரு பாவையினை இழைத்துத் திருத்தவல்ல ஒருகம்மியனது கைத்தொழில் வன்மைக்கு அப் பசும் பொன்னே இடந்தரக்காண்டுமல்லது, ஒரு செங்கல் இடந்தரக் காண்டும்இல்லையே. பலவகைமட்பாண்டங்களை வனையும் ஒரு வேளானது கைவினைத் திறத்திற்குக் குழைவான களிமண்ணே இசைந்துவரக் காண்டுமல்லது, ஆற்று மணல் இசைந்துவரக் காண்டுமில்லையே. வாய்மணக்கக் கைம்மணக்க வயிறுகுளிரத் தீஞ்சுவையுணவு அமைக்குஞ் சமயற்காரனுக்குக் காய் கனி கிழங்குகள் முதலான பண்டங்களே உதவக்காண்டுமல்லாற், கல்லும் மண்ணுங் கரியும் உதவக்காண்டுமோ? கலையறிவுங் கற்பிக்குந் திறமும் ஒருங்குவாய்ந்த ஒருநல்லாசிரியனை அடுத்த மாணாக்கருள்ளும் ஒரு பகுதியாரே ஆசிரியன்றன் புலமைத்திறத்தை அடைவதல்லால், எல்லாரும் அவனைப்போல் அறிவிற் சிறந்தாரா

தல் கண்டதுண்டோ? நெருப்புக்கண்ணாடியே கதிரவன் வெம்மையைக் கவர்ந்து கக்கக் கண்டாமல்லது, பிறகண்ணாடிகள் அதனைக் கவர்ந்து கக்கக் கண்டாமோ? இங்ஙனமே எல்லாப் பொருள்களையும் எல்லா உயிர்களையும் அழகுருவாக்கி யாநின்ற இறைவன்றன் அருளாற்றலின் வழியவாய்நின்று அதனால் அழகிற் றுலங்குவனவும், அதன்வழி நில்லாது மருள்வழி நின்று அழகிலவாய் அருவருக்கப் படுவனவும் வெவ்வேறாகவே யிருக்கின்றன. கடவுளை நினைத்தலுங் கடவுளை வழிபடுதலுங் கடவுளின் அருளறிவு ஆற்றல்களைப்பேசுதலும் உடையராய் ஒழுகுவாரையும், அவரை நினைத்தலும் பேசுதலும் இலராய்க் கடவுளென் றொருபொருள் இல்லையெனச் செருக்கிப்பேசி உழிதருவாரையும் ஒப்பிட்டுப் பார்மின்கள்! முன்னையோர் அன்பு அருட்குணங்களாற் குழைந்த நெஞ்சமும், அவற்றின் ஒளியாற் கிளர்ந்த முகனும், அவற்றோடொத்த மென்செயலும் உடையராய்த் தம்மைக் கண்டார்க்குந் தம்மோடுரையாடினார்க்கு மெல்லாம் அன்பையும் உருக்கத்தையும் உண்டாக்கித் தாஞ் செல்லும் இடமெல்லாம் அருட்சுடர் ஒளிரச்செய்தலும்; ஏனைப்பின்னையோர் வன்பும் மருளும் ஏறிய வன்னெஞ்சமும், அவற்றாற் பாழடைந்த முகமும், அவைதமக்கேற்ற வன்செய்கையும் உடையராய்த் தம்மைக் கண்டார்க்குந் தம்மோ டுரையாடினார்க்குந் துன்பத்தையும் அருவருப்பையுந் தந்து தாஞ்செல்லும் இடங்கடோறும் அறியாமையும் இறுமாப்பும் மிக்கு இருண்டு தோன்றப் புரிதலும் எவரும் எளிதிலே அறிந்துகொள்ளத் தக்கவாறாய்ப் பிரிந்து காணப்படுகின்றன. ஆகவே, அழகுக்கும் அறிவுக்கும் அன்புக்கும் அருளுக்கும் ஆற்றலுக்கும் ஒரு கொள்கலனான கடவுள் தான் நிறைந்துநிற்கும் எல்லாவற்றையுந் தன்னுருவாக்கி வருதலிலேயே முனைந்திருப்பினும், அதன் அருட்செயலுக்கு இடந்தராமல் அதனொடு மாறுகொண்டு நிற்பனவெல்லாம் அழகிலவாகவே யிருக்குமென்றுணர்ந்துகொள்க. இவ்வாற்றாற், கடவுளின் அருள்வழி நின்று தம்மை அழகுசெய்துகொள்ளுதலை விழையாது, அதற்குமாறாய் நின்று தம்மை அழகற்ற கொடியராக்கிக் கொள்வார்க்கு, அஃது அவர் குற்றமேயாய் முடியுமல்லது கடவுள்குற்றமாகா தென்பதூஉந் தேற்றமாமென்க. என்றித்துணையுங்கூறியதுகொண்டு, அழ



கிய ஒருமாதுக்கு அழகிய ஓராடவனையும், அழகிய ஓராடவனுக்கு அங்ஙனமே அழகிய ஒருமாதினையுங் கூட்டிமணஞ் செய்து வைத்தலே, அவர் இருவரும் இன்பவாழ்க்கையில் வழுவின்றி நீளவாழ்தற்கு வழியாதல் அறியப்படும். அழகின்பொருட்டு ஆண் பெண் பாலார் படாத பாடெல்லாம் படுவதையும், எல்லாவற்றினுஞ் சிறந்த தம் உயிரையும் அவர் ஒரு துரும்பாகக்கருதி இழத்தலையும், இதன்பொருட்டு உலகமே தலைகீழாய்ப் புரண்டுபோதலையும், "அழகினை விரும்பாதே!" என்று பிறர்க்கு வற்புறுத்தி அறிவுசொல்வாருந் தாம் அழகியார் ஒருவரைக் கண்டால் தமது நிலைமறந்து தகாதனசெய்து ஒழுகுதலையுமெல்லாம் நேரே கண்டு வைத்தும், நம்மனோர் அழகுமிக்காரை அழகிலார்க்கு மணஞ் செய்வித்து, அவரைச் சொல்லொணாத் துன்பக்கடலுள் ஆழ்த்தி மாய்த்தல் நன்றாகுமோ சொன்மின்கள்! மேலே எடுத்துக் காட்டிய பழந்தமிழ்ச் செய்யுளை நுவன்ற ஆசிரியர் பிசிராந்தையார் தம் மனைவி அழகு அறிவு அன்பு முதலான எல்லாநலங்களினுஞ் சிறந்தவரா யிருந்தமையினாலேயே தாம் என்றும் இளைஞராயிருக்கலான வியப்பினை விளக்கிய நுட்பம் நம்மனோர் எல்லாரும் பசுமரத்தாணிபோற் றம்முள்ளத்திற் பதித்துவைத்து ஒழுகற்பாலார்.

அஃதொக்கும், அழகில்லாத மனைவியையோ அழகில்லாத கணவனையோ தம்மவர் கட்டாயத்தாற் பெற்று இல்வாழ்க்கையை நடத்தப் புகுந்தார்க்கு இனிது வாழும் நெறி வேறில்லையோ வெனிற், கூறுதும். அழகிலாரொடு கூடியிருக்க நேர்ந்தால், அவர் அழகிலாதிருத்தலை அடிக்கடிசொல்லி அந்நினைவினை அவர் மனத்திற் பதித்துவிடுதலாகாது. ஏனெனில், தாம் அழகிலாமையை நினைக்க நினைக்க அந்நினைவுமுதிர்ந்து, பின்னும் அவரை அழகில்லாமற் செய்துவிடும். எத்துணை அழகில்முதிர்ந்தாருந் தமதுடம்பு அழகு குறைந்து அருவருப்புள்ளதாக மாறுகின்றதென அழுத்தமாகத் தொடர்பாக நினைந்து வருகுவராயின், அவர் அந்நினைவின் உறைப்புக்குத் தக்கபடி சில திங்களிலோ அல்லது சில ஆண்டுகளிலோ அருவருக்கத்தக்க உருவத்தை அடைகுவர். அழகுக் கொடியான காரைக்கால் அம்மையாரும், அழகியபாவையையொத்த கண்ணகியாருந் தம் நினைவுக்கேற்ற பேய்வடிவத்தைப் பெற்றுக், கண்டார்க்கெல்லாம் பெருந்திகிலை விளைத்து வாவில்

லையா? அதுபோலவே, அழகிலாதவருந் தம்மை அழகுடையராகவே நினைந்துவரும்படி நாம் செய்து வருகுவமாயின், அவருந் தமது நினைவின் உறைப்புக்குத்தக்கவாறு சில திங்களிலோ அன்றிச் சில ஆண்டுகளிலோ அழகுடையராக மாறுதல்கூடும். அழகு மிக்கவர் சிலர் அதனையிழந்து வேறுபட்ட உருவத்தினராகவும், அழகின்றியிருந்த மற்றைச்சிலர் அதுமாறி அழகிய வடிவத்தினராகவுந் தோன்றியதை எம் வாழ்நாளிற் பலகாலும் யாங் கண்டிருக்கின்றேம். அழகாயிருந்தவரிற் பலர் ஊனுண்டுங் கட்குடித்தும் பரத்தையரை மருவி நோய்கொண்டும் ஆயம் ஆடியும் பொய்ம்மொழிந்துங் கலாம்விளைத்துந் திரிந்த சில திங்களிலெல்லாம் பார்த்தற்கு மிக அருவருப்பான உருவமுடையராய் மாறிப் போயினர். அழகிலாதிருந்த சிலரோ, கடவுளிடத்தும் மக்கள் முதலான எல்லா உயிர்களிடத்தும் பேரன்புடையராய்த், தூய ஆவின்பால் காய் கனி கிழங்குகள் வித்துக்கள் கீரைகள் முதலியவைகளையே உணவாகக்கொண்டு, மெய்பேசும் வாழ்க்கையினராய்க், கல்வியில் மேம்பட்டு, எல்லார்க்கும் நன்றே செய்பவராய் ஒழுகிவரவே, அவர் சில்லாண்டுகளிலெல்லாம் அழகொளிமிக்கவராய் நன்கினிது மாறியதையும் யாம் பார்த்திருக்கின்றேம்.

அழகென்பதுயாது? தூய நினைவாலுந் தூய மொழியாலுந் தூய செயலாலுந் தூய உணவாலுந் தூய உறையுளாலும் உண்டாகும் ஒளியுந் திருந்திய அமைப்புமே யன்றோ? பொதுவான அழகுடையராயிருக்கும் அறிஞர் சிலருஞ் சில உயர்ந்தசெயல்களைச் செய்து கிளர்ச்சிமிக்கிருக்கும் நேரங்களிற் காண்பவர் கண்ணையுங் கருத்தையுங் கவரும் பேரழகுடையராய்த் துலங்கியதை யாமுங் கண்டிருக்கின்றேம், பலர் சொல்லவுங் கேட்டிருக்கின்றேம். இன்னும், அழகானது உடம்பின்செழுமையினால் உண்டாகின்றது; உடம்பின்செழுமையோ உடம்பினுள் ஓடுஞ் செந்நீரின் செழுமையினால் உண்டாகின்றது; செந்நீரின் செழுமையோ தூய நினைவினால் உண்டாகின்றது. தூய நினைவுடையார்க்குச் செந்நீர் தூயதாயிருத்தலுந், தீயநினைவுடையார்க்கு அது நஞ்சாய்ப்போதலும் உண்மையாக நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளாலும், அமெரிக்க நாட்டு அறிஞர்கள் ஆராய்ந்துகண்ட உண்மைகளாலும் மேலத்தியாயங்களில் விரித்து விளக்கிக்காட்டி யிருக்கின்றேம். ஆதலால்



தம்முடன் உறையும் மனைவிமக்கள் சுற்றத்தார் முதலான அனைவருந் தூய நல்லெண்ணங்களிலேயே பழகிவருமாறு செய்தல் முதன்மையானது. தம்மைப் பற்றியாவது பிறரைப் பற்றியாவது குறைவாகத் தீதாக எண்ணும் எண்ணத்தை அடியோடு ஒழித்து விடல் வேண்டும். ஏனென்றால், தம்மைப்பற்றிக் குறைவாக எண்ணும் ஒருவருக்கு அறிவும் முயற்சியும் அவிந்துபோகின்றன; அவைஅவிந்து போகவே அவருடம்பும் உயிரும் நீடு இனிது வாழ்தலும் இயலாது. அங்ஙனமே பிறரைப்பற்றிக் குறைவாக நினைக்கும்போதும், அவரது நினைவு அக்குறைபாடுகளிற் சிக்குண்டு மேல்நிலைக்குச் செல்லமாட்டாது கீழ்க்கிடந்து, அங்ஙனம் நினைப்பாரையே அழித்து விடுகின்றது. இம்மக்கட்பிறவியிற் குற்றமே யுடையாரையும் அல்லது குணமே யுடையாரையுங் காண்டல் ஒருசிறிதும் ஏலாது. எத்துணைக்குற்றம் உடையார்பாலுங் குணங்கள்சிலவுங் கட்டாயங் காணப்படும்; அங்ஙனமே எத்துணைக்குணம் உடையார்பாலுங் குற்றங்கள் சிலவுங் காணப்படும். ஆகவே, தமது நன்மையின் பொருட்டாக வாவது பிறருடைய குற்றங்களை நினையாது ஒழிக.

இனிப், பிறரோடு உரையாடுங்காலும் பிறர் குற்றத்தைச் சிறிதும்பேசாது, அவருடைய குணங்களையே எடுத்துப்பேசுக; அவ்வாறு அவர்தங் குணங்களைப்பேச விருப்பமில்லையாயின் வாளா இருந்துவிடுக. தம்மவர் செய்யும் பிழைகளைக் கண்டு அவரைத் திருத்துங்காற் சினந்து பேசுதல் எவர்க்கும் இயல்பேயாயினும், இயன்றவரையிற் சினத்தைஅடக்கி அவரை இனிய சொற்களாற் றிருத்தவேமுயல்க. திருந்தாமல் அவர் அடுத்தடுத்து அப்பிழைகளையே செய்வராயின், அவரது தொடர்பைநீக்கி விடுதலே நன்று. நீக்கலாகாத தொடர்புடையராயின், அவர் தாஞ்செய் பிழையால் தாமே துன்புற்றுத் திருந்துமாறு விட்டுவிடுக. அவர் செய்பிழையால் நீவிருந் துன்புறுவதாயிருந்தால் அவருதவியை வேண்டாது, நுமக்கு ஆவனவற்றை நீவிரே செய்துகொள்வதன்றி அதற்கு வேறுமருந்தில்லை யென்பதுணர்ந்து, நுமதுநினைவைக் கல்வியிலும் வேறு நல்லெண்ணங்களிலும் உய்த்து அமைதியாய் மகிழ்வாய் இருக்கப் பழகிக்கொள்க. இன்னும், மெய்யல்லாத நிகழ்ச்சிகளை மெய்போற் பேசிப் பிறரை ஏமாற்றுந் தீயமுறையை

அறவேகைவிடுக. பிறரை ஏமாற்றமுந்துவோர் தமது எண்ணம் நிறைவேறும்முன் தாமே ஏமாறிப்போதலைப் பலகாலும் பலர்பாற் கண்டிருக்கின்றேம்.

இனித், தாமுந் தம்மைச்சார்ந்தாருந் தூயசெயல்களுடையராய் நடப்பதிற் பெரிதுங் கருத்துவைத்தல் வேண்டும். தூயசெயல்கள் என்பன தம் உடம்பைப்பற்றி நிகழ்வனவுந், தாம் புழங்கும் பண்டங்களைப்பற்றி நிகழ்வனவுந், தம்மொடு தொடர்புடையாரையுந் தம்மொடு தொடர்பிலாதாரையும் பற்றிநிகழ்வனவும் என முத்திறப்படும். அவற்றுள் முதற்சொல்லிய செயல்கள் முதலாய்க் கருதற்பாலன. தமதுடம்பையுந் தம் முடம்பின் உறுப்புகளையும் அழுக்கும் நாற்றமும் இல்லாமல் துப்புரவாய் வைத்துக்கொள்ளுதலுந், தாம் உடுக்கும் உடைகளையும் அங்ஙனமே தூயவாகவைத்துக் கொள்ளுதலும் முதற்படியான தூயசெயல்கள் ஆகும்.

பெண்பாலாரைத் தவிர ஆண்பாலார் தலைமேற் கூந்தலை நீளவளரவிடுதல் ஆகாது; அதனைமழுங்கச்சிரைத்துத் தலையை மொட்டையாக வைத்தலும் ஆகாது. நீளவளர்த்த கூந்தலுடையார் நீராடியபின் அதனை யுலர்த்துதற்கு நீண்டநேரங் கழிக்கவேண்டியிருத்தலாலும், அங்ஙனம் அதனையுலர்த்தாதுவிட்டுத் தமக்குரிய தொழின்மேற் புகுந்தால் அவர் நீர்க்கோவையும் அதனால்மண்டையிடி காய்ச்சல் இருமல் முதலானநோய்களுங் கொண்டு பெரிதுந் துன்புறக் காண்டலாலும் அவர் கூந்தலை நீளவிடாமல், ஒன்று இரண்டு அல்லது மூன்றுவிரற்கடை நீளம்வைத்து அதனைக் கத்தரித்து விடுதலே நன்று. தலையில் மயிரே இல்லாமல் அதனை மழுங்கச் சிரைத்துவிடுதலோ பெரிதுங்கடியற்பாலது. எண்சாண் உடம்புக்குந் தலையே சிறந்தது. அத்தலையினுள்ளும் மண்டையோட்டின் அடியில் அமைந்திருக்கும் மூளையே அதனினுஞ்சிறந்தது. அம்மூளையோ மிகமெல்லிய தன்மை வாய்ந்தது. அத்துணை மென்மையான மூளையில் ஒரு சிறுபிசகு நேர்ந்தாலும் ஒருவனது உயிர்வாழ்க்கையானது சின்னபின்னமாகச் சிதைந்துவிடும். ஆகலினாற்றான், அம்மூளையைக் காப்பதற்கு அழுத்தமான மண்டையோடு அதன்மேற் கவிக்கப்பட்டிருத்தலுடன், அம்மண்டையோட்டைக் காப்பதற்கு அடர்ந்த மயிர்த்தொகுதியும் அதன்மேல் ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக்கின்றது. இறைவன் வகுத்த

டில் வார்த்தவைகளுஞ், சீமையில் வார்த்தவைகளுமாக இரண்டுவகை உள்ளன. எல்லாவகையான புத்தகவேலைகளுஞ் சில்லரைவேலைகளுஞ் செய்தற்கு உதவும். அச்சிடும் இயந்திரம் டெம்மிபோலியோ அளவினது. ஓர் ஆளே இதனை இயக்குவதற்குப் போதும். பெரிய இயந்திரங்களுக்கோ மூன்றுநான்கு ஆட்கள் மிக்க சம்பளங்கொடுத்து வைக்க வேண்டும். அடிகளின் அச்சியந்திரத்திற்கோ ஓர் ஆள் போதும்.

இனி, அடிகளின் நூல்களில் அச்சடித்து முடிந்திருப்பன வெல்லாம் பதிவிலேயிட்டுப் பதிப்புரிமை(copy right)யுடன் கொடுத்துவிடப்படும். அரைகுறையாய் அச்சிட்டிருப்பனவுஞ் செலவுக் கணக்குப் பார்த்துக் கொடுப்பதுடன், மிச்சமும் ஓர் ஏற்பாட்டின்படி அடிகளே எழுதிக்கொடுத்து முடித்துத்தருவார்கள்.

மக்கள் வாழ்க்கைக்கு முதன்மையாக வேண்டப்படும் எல்லா அறிவுத்துறைகளையுந் திருத்தமான அழகிய செந்தமிழ் உரைநடையில் விளக்கிக்காட்டும் நூல்கள் அடிகளால் இயற்றப்பட்டவைகளே யல்லாமல் வேறுஇல்லை. ஆகவே, இத்தென்னாட்டிலும், இலங்கை பர்மா, மலாய் நாடுகளிலுந், தென்னாப்பிரிக்காவிலும் உள்ள தமிழ் மக்களில் அறிவுவிளக்கத்தை அடையவிரும்புவார் எல்லாரும் அடிகளின் நூல்களையே மிகுதியாய் வாங்கிக் கற்கின்றார்கள். நாளேற நாளேற அடிகள் நூல்கள் நூறாயிரக்கணக்காய்ப் பரவும் என்பதில் ஐயம்இல்லை.

அடிகளின் அச்சுக்கூடத்தையும் நூல் விற்பனையையுஞ் சென்னை மதுரை திருநெல்வேலிபோன்ற நகரங்களில் வைத்து நடத்தத்தக்கவர்க்குத் திங்கள்ஒன்றிற்கு ஐந்நூறுரூபா வருமானம் வரும். அடிகளின் அச்சுக்கூடமும் நூல்களும் ஒரு குத்துமதிப்பாய்ப் பதினையாயிரரூபாவுக்குமேல் விலைபெறும். இவ்விரண்டும் சேர்த்து மொத்தவிலைக்கு வாங்கிக்கொள்ள விரும்புவோர் ஆசிரியர் மறைமலையடிகட்கு நேரே எழுதிக்கொள்க. அச்சுக்கூடமாயினும், நூல்களாயினும் வெவ்வேறாக விற்கப்படா.

மணிமொழி

## திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை

இச்செய்யுள் நூல் ஆசிரியர் மறைமலையடிகளால் தமது 22-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதாகும். இதன்கண் உள்ள முப்பது செய்யுட்களிற் பத்து அகவற்பாக்கள், **திருமுருகாற்றுப் படையைப்** போன்ற பழைய சங்கச்செய்யுள் வளம்நிரம்பித், தம்மை ஓதுவார்க்கு உயர்ந்த தமிழறிவைத் தருவதுடன், முருகப்பிரான் திருவருளுக்கும் அவர்களை உரியராக்கும். இற்றைக்கு 35-ஆண்டுகளுக்கு முன் இந்நூல் வெளிவந்தகாலத்தில், அஞ்ஞான்றிருந்த தமிழ்ப்பெரும் புலவர்களும் ஆசிரியர்களும் இதன் பழந்தமிழ்ச் சொற்சுவை பொருட்சுவைகளைப் பெரிதும் பாராட்டிக் கருத்துரைகள் எழுதியிருக்கின்றனர். இந்நூல் எல்லார்க்கும் பயன்படும் பொருட்டு அடிகளின் மாணவர் திரு இளவழகனார் தாம் இந்நூலை அடிகளிடம் பாடங்கேட்டு இதற்கு ஓர் உரை வரைந்திருக்கின்றார். இந்நூலை மறுபடியும் வெளியிடும்படி பலர் புகாற் கேட்டதற்கு இணங்கி, நூலும் உரையும் அடிகளால் அச்சிடப்பட்டுவருகின்றன. இந்நூற்பதிப்புச் செலவுக்குப் பொருளுதவி செய்யும் அன்பர்கள் முருகப்பிரான் திருவருட்கு உரியராவர்.

ஓம

## ஆசிரியர் மறைமலையடிகள்

### இயற்றியநூல்களில் இருப்பிலிருந்து விலைபோய்க் கொண்டிருப்பவை

மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும், ரூ10; கோகிலாம்பாள்கடிதங்கள் (2-ஆம் பதிப்பு), ரூ 3; மனிதவசியம், ரூ2, 8; அறிவுரைக்கொத்து (2-ஆம் பதிப்பு), ரூ2. 4; பழந்தமிழ்க்கொள்கையேசைவசமயம் ரூ1. 12; சிந்தனைக்கட்டுரைகள் (2-ஆம் பதிப்பு), ரூ1. 8; பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை (3-ஆம் பதி.), ரூ1. 8; முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை (4-ஆம் பதி.), ரூ1. 4; சாதிவேற்றுமையும்போலிச்சைவரும் (2-ஆம் பதி.), ரூ1. 4; வேளாளர்நாகரிகம் (2-ஆம் பதிப்பு), ரூ1. 4; பொருந்தும் உணவும்பொருந்தா உணவும் ரூ1. 4; கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா ரூ1. 4; அம்பலவாணர்திருக்கூத்தின் உண்மை, ரூ 1; சோமசுந்தரக் காஞ்சியாக்கம், அ12; தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும், அ8; சைவசமயத்தின் நெருக்கடியான நிலை, அ6; தென்புலத்தார் யார்?, அ6;

The Oriental Mystic Myna (In English) 3 0 0

இப்போது நடைபெறும் ஞானசாகர, **16-ஆம் பதுமத்தின்** 12-இதழ்களுக்குந் தபாற்கூலி யுட்பட உள்நாட்டுக் கையொப்பம் நான்கு ரூபா நாலணா; வெளிநாட்டுக் கையொப்பம் நான்கு ரூபா எட்டணா. மாதிரிக்கு இதழ் அனுப்புவதில்லை. நூல்களும் ஞானசாகரமும் வேண்டுவோர் பல்லாவரம், பொதுநிலைக்கழகப் புத்தகசாலைக்குத் தொகை அனுப்புக.

### அச்சாகிக் கொண்டிருக்கும் நூல்கள்

1. மக்கள் நூறாண்டு உயிர்வாழ்தல் எப்படி? 2 சாகுந்தல நாடகம் 2-ஆம் பதிப்பு, 3 சைவசித்தாந்த ஞானபோதம் 3-ஆம் பதிப்பு, 4 திருவொற்றிமுருகர் மும்மணிக்கோவை 2-ஆம் பதிப்பு உரையுடன், 5. சிறுவர்க்கான செந்தமிழ் முதற்பகுதி, 6. *Saiva Siddhanta As A Philosophy of Practical Knowledge.*

### இனி அச்சாகவேண்டும் நூல்கள்

1. தொலைவில் உணர்தல், 2. சிவஞானபோத ஆராய்ச்சி, 3. திருக்குறள் ஆராய்ச்சி, 4. பண்டைத் தமிழர் ஆரியர் 3-ஆம் பதிப்பு, 5. மரணத்தின்பின் மனிதர் நிலை 2-ஆம் பதிப்பு, 6. யோகநித்திரை 2-ஆம் பதிப்பு, 7. குமுதவல்லி 2-ஆம் பதிப்பு.